# வா இந்தப் பக்கம்

மீரா



# வா இந்தப் பக்கம்

மீரா

அன்னம்
மனை எண்: 1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் - 613 007.

வா இந்தப் பக்கம் / © கவிஞர் மீரா / முதல் பதிப்பு: செப்டம்பர் 1986 - இரண்டாம் பதிப்பு டிசம்பர் 2002/ வெளியீடு: அன்னம், மனை எண்: 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் - 7/ அச்சாக்கம்: ஹேமமாலா சிண்டிகேட், சிவகாசி/ உள் ஓவியங்கள்: மகி / அட்டை வடிவமைப்பு: மணிவண்ணன் / விலை. ரூ.30/-

**BIBLIOGRAPHICAL DATA**

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Va Indha Pakkam |
| Subject | : | Essays |
| Author | : | Meera |
| Language | : | Tamil |
| Edition | : | First Edn. September 1986<br>Second Edn. Dec. 2002 |
| Size of the Book | : | Crown 1x8 |
| Printing Point | : | 10.5 Pt. |
| Paper | : | 11.6 Cream wove |
| Number of Pages | : | 104 |
| Number of Copies | : | 1000 |
| Printers | : | Hemamala Syndicate, Sivakasi |
| Publishers | : | ANNAM<br>Plot No: 1, Nirmala Nagar<br>Thanjavur - 613 007. |
| Price | : | Rs.30/ - |

# கேட்டால் சொல்வேன்

சொற்களால் என்னென்ன சாதிக்க முடியும்?

''வார்த்தை ஜாடிகளில் இணக்கமென்னும் வன தேவதையைச் சிறைப்பிடித்து அடைத்தோம்;

சொற்கிண்ணங்களில் உவகையென்னும் பழரசத்தைப் பரிமாறினோம்; வார்த்தை மெழுகுத்திரிகள் கொண்டு நம் இதயத்தின் அந்தரங்கங்களை ஒளிசெய்தோம்;

வார்த்தை விரல்களால் வியப்புக்களின் முடிச்சுகளை மெல்ல அவிழ்த்தோம்; சொல் உளிகளால் அர்த்தச் சிற்பங்களை வடித்தோம்;

வார்த்தைகளால் மிருதுவாய்த் தொட்டு அழகுகளைத் துயிலெழுப்பினோம்'' - ஜாஹிதா ஜெய்தியின் (Zehida Zaidi) பட்டுப்போன்ற மென்குரல் வார்த்தைகளின் வலிமையை இப்படியெல்லாம் பேசுகிறது.

உண்மைதான்!

எப்பேர்ப்பட்டவை இந்தச் சொற்கள்!

இருபனிக்கட்டிகளை உரசி நெருப்புத் தயாரிக்கும் ஒரு சொல்;

தீச் சுவாலைகளால் விசிறி செய்து கோடைக்குக் குளிர் வீசும் வேறொரு சொல்!

ஒரு தாவலில் காயம் செய்யும் ஒரு சொல்; ஒரு தடவலில் அதை ஆற்றும் மாயம் செய்யும் ஒருசொல்;

கல்லைப்பிசைந்து கனிச்சாறு பிழிந்துவிடும் சொல்; நுரைக்குமிழை முரடாக்கி வைரமாக்கும் இன்னொரு சொல்!

நேற்றின் வானத்தைக் கிழித்து ஜெட் எனப் பின்னோக்கிப் பாயும் ஒருசொல்; நாளையின் திசையை உரித்து ஏவுகணையாய் முன்பாயும் மற்றொன்று! என்னவிந்தை!

இனிப்பென்றால் வாயில்தேன் ஊறுகிறது.

நெருப்பென்றால் நாக்கு கொப்பளித்துவிடுகிறது.

கடவுளே உலகத்தை வார்த்தையால்தான் படைத்தானாமே?

எந்த மொழியில்? கடவுள் ஒரு கவிஞனா? அப்படியென்றல் சரிதான்!

பாரதி வரமாய்க்கேட்ட மந்திரச் சொற்கள், அவன் பேரப்பிள்ளைகளுக்குத் தாயமாக வாய்த்திருக்கின்றன.

இரத்தம் கக்கி மயங்கிக் கிடப்பவனைப் போர்வைக்குள் புதைத்து இவர்கள் ''வா, இந்தப்பக்கம்'' என்று குரல் கொடுக்கிறார்கள். உடனே அந்த அரைப்பிணம் ''வந்தேன்'' என்கிறது.

கேட்டால், பதில் சொல்கிறது!

எல்லாம் நெஞ்சுக் கூட்டில் இருக்கும் 'தாயத்தின்' மகிமையால்தான்.

❐

இந்த மீராவைப் பாருங்கள்.

சொற்களை வைத்துக்கொண்டு என்னென்ன வித்தைகள் 'ரிகிறார்! நாம் அழைக்கும்போது நழுவி ஓடிப்போய் நம்

முதுகந் தண்டுக்குள் பதுங்கிக் கொள்ளும் சொற்கள் இவரிடம் மட்டும் வாலை மடக்கிக் கால்களுக்கிடையே வைத்துக்கொண்டு, என்னமாய்ச் சொன்னபடி கேட்கின்றன!

இவர் காட்டும் வித்தை வாய்ச்சாலம் அடித்து வயிற்றைக் கழுவிக்கொள்ள அல்ல. கீரி-பாம்புச் சண்டை தேர்தல் வாக்குறுதியாய் நிற்க, கடைசியில் பற்பொடி விற்றுவிட்டு அடுத்த சந்தை தேடும் வியாபாரத்துக்கல்ல. கண்கட்டுவித்தையில்லை. கண்திறக்கும் வித்தை. இது இவர் எழுத்துக்களுக்கே தெரியும் போலிருக்கிறது. அதனால்தான் இத்துணை பயபக்தி!

❒

புதுத்தமிழின் இலக்கிய வரலாற்றில்-

மீராவின் பாட்டுக்கு ஒரு தனியிடம் உள்ளது போல், மீராவின் வசனத்துக்கும் ஒரு தனியிடம் உண்டு.

தமிழ் உரைநடைக்குக் கூட இத்துணை இதம் (Rhythm) உண்டா என வியக்கவைக்கும் நடை அவருடையது.

அவர் ரசித்த ராபர்ட் லிண்ட், நான் ரசிக்கும் ஆஸ்கார் வைல்ட், ஷா, இவர்களின் ஆங்கிலம் போல், பஷீரின் மலையாளம் போல், கிஷன் சந்தரின் உர்தூ போல் குறும்பும் இளமையும் துள்ளும் ஆழமான தமிழ் மீராவுடையது. அவர் நடையில் தன்னம்பிக்கையின் நிமிர்வும் மிடுக்கும் உண்டு. ஆனால் ஆடம்பர ஆரவாரமோ ஆணவச் செருக்கோ இருப்பதில்லை. அலங்கார அணிகள் இல்லை. தாலி, இறுக்கமான உள்ளாடை இவற்றையும்கூட உதறிவிட்ட புதுமைப் பெண்போல் நடக்கும் பெருமித நடை அது. பாமரரின் மொழி (Slang)யை, ''சட்டைக் கையைச் சுருட்டி ஏற்றிக்கொண்டு, உள்ளங் கைகளில்

எச்சில் துப்பிக்கொண்டு வேலையில் இறங்கும் ஒரு மொழி'' என்று கார்ல் சாண்ட்பெர்க் வர்ணித்தார். அந்த மொழிக்கு மிக நெருங்கிய எளிமையும், கவிதையின் எழிலும் உடையது மீரா நடை!

□

ஜூனியர் விகடனில் 2-11-83 முதல் 1-1-84 வரை மீரா எழுதிவந்த பத்துக் கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப் பட்டிருக்கின்றன. 'மகியின்' அற்புத ஓவியங்களுடன்!. 'வா இந்தப்பக்கம்' என அழைப்பில் தொடங்கி 'திருவிழா வருகிறது, தேர் வருகிறது' என்று தேர்தல் வேடிக்கை காட்டி முடிகிறது நூல். இறுதி வரியும் (அந்தாதி போல்)'வா இந்தப் பக்கம்' என்று முடிவது மீராவின் தீராத விளையாட்டுக் குறும்பைக் காட்டுகிறது. ஒவ்வொன்றும் வேறுவேறு பொருட்கள் பற்றி எழுதப் பெற்றவை எனினும் அனைத்திலும் நம் அரசியல் சமுதாய வாழ்வே பிரதிபலிக்கிறது. வெளியிட்ட பத்திரிகை அரசியல், சமுதாய அவலங்களை அம்பலப்படுத்தும் இதழ் என்பதால் நேர்ந்தது அல்ல இது. மீராவின் இயல்பே அதுதான் என்பதால் விளைந்தது. அவருக்கென்று தனிப் பட்ட தேவைகள், தனிப்பட்ட கனவுகள் எதுவுமில்லை. அவர் ஒரு தனி, மனிதத் தீவல்லர். சமுதாய மனிதர், புறவயமானவர் (Extravert). காதலைக் கூட அவரால் அரசியல், சமூகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில்தான் பார்க்கமுடியும், பாடமுடியும். ஞாயிற்றுக் கிழமைக் கட்டுரையில் கூடத் தனக்காகவா வருந்துகிறார்? பிழைகள் தரும் இன்பம் பற்றி எழுதும்போதும் எழுத்துப் பிழைகளை ரசிக்கும் இவருக்கு சமுதாயத்திலுள்ள கருத்துப்பிழைகள் கண்ணை உறுத்துகின்றன. இவர் எழுத்துக்கள் வாயில் ஊறி வயிற்றினுள் எச்சில் அல்ல. வரம்பற்ற மகிழ்ச்சியிலும், அளவற்ற துயரத்திலும்

விழியில் ஊறி வெளியில் வழியும் கண்ணீரைப்போலப் புறவயமானவை, உணர்வானவை. ''ஒருவரின் மொழிநடை அவர்தம் ஆளுமை (Personality)யை அடையாளம் காட்டுகிறது'' என்று ஃப்ரை (N.Frye) உரைத்தது போல, மீரா என்னும் மனிதரே இக்கட்டுரையில் வெளியிடப்படுகிறார். அமீபாவிலிருந்து மனிதன் பரிணமித்தது உண்மையோ இல்லையோ? கவிஞன் ஓர் அமீபாதான். தன்னை உடைத்து உடைத்துத் தன்னைத்தான் இனப்பெருக்கம் செய்து கொள்கிறான்-தன் முழுமையை இழக்காமலேயே!

சமுதாயப் பொறுப்புணர்ச்சி, உலகின் உயிரனைத்தும் நலமுறவேண்டும் என்ற மனிதாபிமான அக்கறை இவை மீராவின் பிறப்பியல்புகள். தீமை கண்டபோது ஆவேசம் கொள்வது இவர் பண்பு. இந்த ஆன்ம வேகமே இவரது மொழி நடையில் மின்சாரம் பாய்ச்சுகிறது. அதனால் இவர் படைப்புக்கள் ஆழத்தில் சரிகைமினுக்கிக் கொள்ளும் கிணற்றைப் போல் அமுங்கலாக இயல்லாமல் பீறிட்டுப் பாய்கின்ற ஆர்ட்டிசான் ஊற்றுக்களாகி விடுகின்றன. இந்த வேகத்தின் விளைவு வியப்பானது. மீராவுக்குச் 'சிவப்போ', கறுப்போ', எந்த நிறமும் பூசிப் பார்க்க நம்மால் முடிவதில்லை. சிந்தனைச் சுழற்சியில் எல்லா நிறங்களும் வெள்ளை வெளிச்சமாகி, ஒளிவீசத் தொடங்கிவிடுகின்றன.

பேச்சு என்பது மூச்சில் முளைப்பது என்பதை மீரா எப்போதும் மறப்பதில்லை. அதனால்தான் அவர் சொற்கள் கொண்டு பபிள்கம் ஊதுவதில்லை. பலூன் ஊதித் தோரணம் கட்டுவதில்லை. எரியும் புண்ணுக்கு இதமாக ஊதும் தாயின் மூச்சுப்போல், கண்ணில் விழுந்த தூசியை ஊதும் நண்பனின் மூச்சுப்போல் மீராவின் சொற்கள் நம்மேல் படர்ந்துவிடுகின்றன.

''வா இந்தப்பக்கம்''- கட்டுரையில் பஞ்சமா பாதகங்களே பஞ்சசீலம் ஆகிப்போன பாரதநாட்டைப் படம் பிடிக்கிறார். மதுவுக்கு எதிர்ப்புக் குரல் கொடுக்கும் ஒரு கவிஞரா? வியப்புத்தான்.

''ஊருக்கு வெளியே நிற்கும் கைகாட்டி மரங்கள் வழிப் போக்கர்களுக்கும் வாகனாதிகளுக்கும் பாதை காட்டு கின்றன. புதிதாய் ஊருக்குள்ளே பல சந்து முனைகளில் அம்புக்குறியோடு கைகாட்டி மரங்கள் முளைத்துள்ளன; 'வா இந்தப்பக்கம்... இதுதான் சாராயக் கடைக்கு வழி!' என்று அன்போடு அழைக்கின்றன. இந்தத் 'தண்ணீர் தண்ணீர்' விசிறிகளுக்கு வீட்டுக்குப் போகும் வழிகாட்ட எந்த கம்பமும் இல்லை'' (பக்கம் 17) இந்த வரிகளை மீண்டும் படித்தால் 'வழிகாட்டும் கைகாட்டி மரங்கள் ஊருக்கு வெளியே தள்ளப்பட்டிருப்பதும் வழி தவறச் செய்யும் கைகாட்டிகள் (!) ஊர்வாசிகளாகியிருப்பதும், வெறும் சாராயச் சீரழிவை மட்டும் குறிப்பதாக எனக்குப் படவில்லை. ஒரு முழுப் பண்பாட்டுச் சீரழிவையே குறியீட்டுப் பாங்கில் சுட்டுகின்றன. 'வழிகாட்ட எந்தக் கம்பமும் இல்லை' என்னும்போது-எந்த அரசியல் கட்சியும் மக்களுக்கு வழிகாட்டுவதாக இல்லை என்ற ஆதங்கமே தொனிப் பொருளாக உள்ளது. பரிசுச் சீட்டுப் பற்றி ''மகாபாரதத்தில் ஒரு மன்னன் சூதாடினான் என்றால் நம் நவபாரதத்தில் ஒவ்வொரு மன்னனும் சூதாடும் ஒரு புதுயுகம்-கிருதயுகம்-கிளர்ந்தெழுந்துவிட்டது. அன்று தருமனோடு சகுனி சூதாடினானென்றால் இன்று மக்களோடு சலக மாநில அரசுகளும் போட்டிபோட்டுக் கொண்டு''... (பக்கம்.18) படிக்கும்போது ஒரேநேரத்தில் உதட்டில் புன்னகையும் விழியோரம் கண்ணீரும் வரச்செய்யும் எழுத்து! கிச்சுக் கிச்சு மூட்டியே அழவைக்கும் நகைச்சுவை!

'கண்டனன் காலினுக்கணியை' - பிரிவு பற்றிய ஒரு நனவோடைக் கவிதையாகவே வந்திருக்கிறது. தலைப்பு கம்பர் அடியின் கேலியடி (Parody). அதனால் நாயகன் நாயகி பாவமே வந்துவிடுகிறது. மண்டபத்தில் காலணிக் கட்டணம் வசூலித்து வரதட்சணை கொடுத்துத் தளர்ந்துபோயிருக்கும் மணவீட்டிலும் இவர் பார்வை பாதிக்கப்பட்டவர் பக்கமே பதிகிறது. பொது இடத்தில் கேவலம் சின்னஞ்சிறு பொருளைத் திருடக் கூசாத பெரிய மனிதனைக் காட்டித் திருட்டும் கூடத் தரம் தாழ்ந்துபோன இருட்டுச் சமூகத்தையல்லவா சுட்டுகிறார்.

கலைகளுக்கெல்லாம் முதற்பொருளான கவிதை கடைப் பொருளாகியிருப்பதைப் படிக்காசுப் புலவரை வைத்து அளவிட்டிருக்கிறார். சிறுதொழில் யுகத்தில் கவிதை ஒரு பெருந் தொழிலாகிவிட்டிருப்பதைக் கவலை யோடு சிந்திக்கிறார். கவிதைக்கு 'டியூடோரியல் கல்லூரி' திறந்தாலும் வெற்றிகரமாய் ஓடுமாம். வரும் நாளில் 'ரெடிமேட்' கவிதைக் கடைகள், தொழிற்சாலைகள் பெரு கிவிடும் என்கிறார். சரிதானே? எட்டுவரி எழுதினால் அதை நான்கு புத்தகமாகப் போட்டுவிடலாம் (அணுகுண்டோ?) என்பதுதான் நம் கவிஞர்களின் இலட்சியமாக இருக்கிறது? டாக்டர் ஜான்சன் சொல்வார் ''தான்படித்த நூல்களைவிட அதிக எண்ணிக்கையில் புத்தகம் எழுதுபவனை எழுத்தாளன் என்றே ஏற்கமாட்டேன்'' என்று. மீரா இந்த வகையிலும் தேறிவிடுகிறார். அவர் படிப்பு எக்கச்சக்கம் என்பதற்கு இக்கட்டுரைகளே சான்று. மேலும், பதிப்பகங்கள், அச்சக வசதிகள் அருகிருந்தும் வெளிவந்துள்ள அவரது நூல்களின் எண்ணிக்கை மிகவும் குறைவுதான்.

கருப்பொருள் கடைப்பொருளாவது மற்றுமோர் அழகிய, பொறுப்புள்ள கட்டுரை. 'தாழ்வுக்கு வந்த

வாழ்வு' அருமையான முரண்கவிதை. அடிப்படையில் அரசியல் அமைப்பை மாற்றாமல் மேம்போக்காக வகுக்கப்படும் முன்னேற்றத் திட்டங்களுக்கு நேரும் 'எதிர் விளைவு விபத்தை' உணர்வோடு விவரிக்கிறது. சாக்கடை, மலம் அள்ளுதல் போன்ற அருவருப்பான தொழில்களை இன்னும் மனிதன் செய்யும் இருபதாம் நூற்றாண்டின் வெட்கக்கேட்டை எண்ணி அழுகிறது இவரது கவிதை நெஞ்சம். இத்தொழிலாளரை அருவருக்கும் அதே வேளையில் அவர்க்குத்தரும் சலுகைகளை மட்டும் எனக்கும் தா என்று கேட்கும் நம் அசிங்கங்களைப் பேனா முனையால் தோலுரித்துக் காட்டுகிறார். நெஞ்சை நெருடும் கட்டுரை.

தெருவில் அழிம்பு செய்யும் மூன்று குரங்குகள் கவிஞர் பார்வையில் 'சட்டத்தை' விட்டுக்கழற்றிக்கொண்டு வந்து விட்டு (காந்தீய) நீதிகளாகத் தெரிகின்றன. அவற்றின் பிறப்பியலை ஆராய்வதுபோல் நம் மனிதர்களையும் அரசியல்வாதிகளையும் ஒருபிடி பிடித்துவிடுகிறார். குரங்குப் பிடிதோற்றுவிடும். குரங்குத் தொல்லைபோக்க அலுவலகங்களை நாடி அடைந்த அனுபவங்கள் கிஷன் சந்தரின் ''நாவல் மரம்'' சிறுகதைபோல் சுவையாகவும் சுருக்கென்றும் உரைக்கப்பட்டுள்ளன. நகைச்சுவைக் கெல்லாம் முத்தாய்ப்பு, நகராட்சித் தேர்தல் நடந்து(!) முடிந்தவுடன் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லப்படும் பதில்தான்.

இப்படி எல்லாக் கட்டுரைகளுமே ஒவ்வொரு வகையில் சிறந்து விளங்குகின்றன. இறுதிக் கட்டுரை தேர்தல் பற்றிய ஒரு நடைச்சித்திரம். ''வாக்குச் சீட்டுக்கும் பரிசுச் சீட்டுப்போல் விலை வைக்கவேண்டும். அப்போதுதான் அதன் மதிப்புத் தெரியும்'' எவ்வளவு உருப்படியான யோசனை!

❑

மீராவின் உரைநடையில் இடையில் ஒரு பக்கத்தை மட்டும் கிழித்துவந்து காட்டினாலும் அவர் எழுத்துத்தான் என்று அடையாளம் கண்டுவிடலாம். ஒரே தொனியில் அவர் உரையாற்றுவதில்லை. உரையாடுகிறார். ஒரு கருத்துக்கும் அடுத்ததற்கும் இடைவெளியில் நமக்குச் சுவைக்க, சிந்திக்க (பேசவும்கூட) அவகாசம் தருகிறார்.

வில்லியம் எச்.காஸ் இப்போது மேற்கில் புகழ்பெற்று வரும் பெரிய கவிஞர். ''நம் எழுத்து நடை இனி எப்படியிருக்கவேண்டும் தெரியுமா?''எனக் கேட்டுவிட்டு எழுதுகிறார்.

''நம் இன்றைய உலகின் மொழியே நமக்குத் தேவை. செல்வச் செழிப்பில் உயர்குடியிற் பிறந்த பெயர்ச்சொற்கள் ஒழுக்கம் கெட்ட வினைச் சொற்களைக் கூடிக் கும்மாளமிட்டு உள்ளம் ஒத்து நிறைவுடன் வாழ்வதான ஒரு ஜனநாயக நடை அது... புதுவித அமைதியும் பொதுவகை இடியும் மோதிக்கொண்டு (பிறக்கும்). நம் தொனி நம் காலத்தோடு இசைவதாய் அமையவேண்டும். அது நம்மைப்போலவே இளமையும் வேகமும், இனிமையும், அபாயமும் கொண்டு விளங்கவேண்டும். உருவகங்கள் அதன் கடவுளாகவும், கடவுள்கள் உருவகங்களாகவும் வேண்டும். ஒரு பாடலின் கோழைத்தனம் அதற்கு கூடாது, ஆனால் கண்களும் கூடக் கேட்கும் வகையில் அது தன் இயல்பைச் சரியாய், உரக்க இசைக்கவேண்டும். நமக்குத் தேவை நம்மிடமுள்ள தளர்ந்துபோன, சிறுநீர் கழிப்பதுபோன்ற உரைநடை அல்ல, மானுடக் கலைத் தேவதையாம் கவிதை...''

காஸ் எதிர்பார்ப்பதற்கும் மேலாகவே சிறப்பாக எழுதுகிறார் மீரா. இந்த சிவகங்கைக்காரரின் உரைநடை கங்கையாய்ப் பெருகிப் பூமிக் குளிர ஓடுகிறது. அதற்கு ஒத்துக் கவித்துவமிக்க உயர்ந்த குறிக்கோள்கள் ஆகாய

கங்கையாகவும், குறிப்புப் பொருட்பெருக்கு பாதாள கங்கையாகவும் மூவுலகும் தழுவி முழங்கிப்பாய்கின்றன. இவர் இன்னும் நிறைய எழுதவேண்டும்.

□

மீராவின் குரல் கேட்கிறது. கூடவே போர்த்திய துணிக்குள்ளிலிருந்து பதிலும்!

''வா, இந்தப் பக்கம்''

''வந்தேன்''

''கேட்டால்?''

''சொல்வேன்''

''எதன் மகிமையால் பேசுகிறாய்''

''நெஞ்சுக்கூட்டில் இருக்கும் தாயத்தின் மகிமையால்''

''இந்தத் துண்டுபோட்ட ஐயா கையில் என்ன வைத்திருக்கிறார்?''

''ரெண்டு மந்திரிகள்''

''அந்த டாக்டரம்மா இரைப்பைக்குள்ளே என்ன இருக்குது?''

''நூத்துக் கணக்கில கருச்சிதைவுப் பிண்டங்கள்''

''இதோ இந்தப் பையன் பைக்குள்ள?''

''பத்து வயசான எம்ப்ளாய்ன்மெண்ட் கார்டு?''

''அந்த வயசுப்பொண்ணு ஏன் வாட்டத்தோடு நிற்குது?''

''வயசுக்குவந்து வருடம் பன்னிரண்டு. வரதட்சணைக்கு வழியில்லை. அவள் கருப்பப்பையில எரிமலை குமுறுது''.

''இந்தச் சின்னத் தம்பி தலைக்குள்ளே என்ன இருக்கு சொல்லு.''

''ஒரு 'டைம் பாம்' இருக்குது''

மீரா சுற்றிலும் ஒருமுறை பார்க்கிறார். ஒவ்வொரு சொல்லுக்கு இடையிலும் 'தும்..தும்' என்று மத்தளம் தட்டிக்கொண்டு அமர்ந்திருப்பவள் யார்? சாட்சாத் கவிதைச் செல்வி!

அவள் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு மெல்லத் திரும்புகிறார்.

நம்மைப் பற்றி என்ன வருமோ என்று அஞ்சி நழுவப் பார்க்கிறேன். அதற்குள் போர்வைக்குள்ளிருந்தவன் எழுந்து அமர்கிறான். சுற்றி நிற்கும் அத்தனைபேர் முகங்கள், அவன் முகம், என் முகம், மீரா முகம் எல்லாம் ஒரே சாயல், வேறுபாடே இன்றி எல்லாம் ஒரே முகம்.....

வாணியம்பாடி
*29.8.86.*

**இக்பால்**

கசப்பாய்ச் சில சம்பவங்கள்...
இனிப்பாய்ச் சில அனுபவங்கள்...

கனலாய்ச் சில கண்டனங்கள்...
புனலாய்ச் சில புகழ்மொழிகள்...

பசியாய்ச் சில தொல்லைகள்...
உணவாய்ச் சில உதவிகள்...

பகையாய்ச் சில மாதங்கள்...
நட்பாய்ச் சில காலங்கள்...

என் நெஞ்சில் வாழும்
கார்த்திகேய ராஜாவுக்கு...

மீரா

# குறிப்புரை

அப்துல் ரகுமான் ஜுனியர் விகடனில் நூறு கட்டுரைகள் எழுதினார்; அதே அளவுக்கு இன்குலாப் தராசில் எழுதிக்கொண்டிருக்கிறார். இருவரும் நாடறிந்த உண்மையான கவிஞர்கள்.

தீபாவளி பொங்கலுக்கு மட்டுமே பத்திரிகைகளில் கவிஞர்களின் எழுத்துக்களைப் பார்க்க முடியும் என்ற நிலையை மாற்றிய இந்த இருவரையும் மட்டுமல்ல, இருவர் எழுத்துக்களையும் தொடர்ந்து வெளியிட்ட-வெளியிடும் பத்திரிகை ஆசிரியர்களையும் பாராட்ட வேண்டும்.

அப்துல் ரகுமான் ஜுனியர் விகடனில் நூறு பூக்களை மலரச் செய்வதற்கு முன்பு பத்து நார்களை அளிக்கும் 'பாக்கியம்' எனக்குக் கிடைத்தது. இந்த வகையில் அவருக்கு நான் முன்னோடி.

மெல்லிய தொனியில் நான் எழுதியவற்றை வாசகர்கள் விரும்பி வரவேற்றதாக விகடன் ஆசிரியர் குழுவினரும் ஆசிரியர் திரு.எஸ்.பாலசுப்பிரமணியன் அவர்களும் மனமுவந்து பாராட்டினார்கள்.

நெருக்கடிக்களுக்கிடையில் என்னை எழுதவைத்த ஜூனியர் விகடன் ஆசிரியர் அவர்களுக்கும், இக்கட்டுரை களை உடனுக்குடன் அனுப்ப ஒருமுறைக்கு இருமுறை தட்டச்சு செய்து தந்த தம்பி து. இராசசேகரனுக்கும் என்றும் என் நன்றி உரியது.

●

இந்தக் கட்டுரைகளைப் பின்னணியாக வைத்துப் பேச வேண்டிய சுவையான செய்திகள் நிறையவே உள்ளன. பிறகொரு சந்தர்ப்பத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று கவிஞர் இக்பாலிடம் முன்னுரை கேட்டேன்.

அவரோ, 'முன்னுரை' என்ற பெயரில் என்னை ஆகாய கங்கையால் நீராட்டியிருக்கிறார். அனிச்சப் பூக்களால் அர்ச்சித்திருக்கிறார். என்மீது அவருக்கு இருக்கும் காதலை எண்ணி எண்ணி, எண்ணி எண்ணிச் சிலிர்க்கிறேன்.

*காதல் வாழ்க!*

*-மீரா*



# வா, இந்தப் பக்கம்

மு.வ. 'நாவற்' பழங்களில் மனம் வண்டாய்க் குடையும் பள்ளிப் பருவம்.

பாளையம்பட்டி சமீன்தாரின் மாளிகைக்குப் பக்கத்தில்-மார்கோ சோப்பின் பச்சை நறுமணங் கமழும் மரநிழலில் அன்றைக்குக் கேட்ட அந்தக் குரல் இப்போதும் எதிரொலிக்கிறது: 'வா இந்தப் பக்கம்...!'

குறளி வித்தைக்காரனின் குரலில் மயங்கி வீதியில் போய்க் கொண்டிருந்தவர்கள் எல்லாம் 'வந்தேன்' என்று கூட்டம் போட்டதும் கடைசி வகுப்பில் ராஜா ஐயர் சுபாஷினி பாடம் நடத்திய அழகை வியந்தபடி வீடு திரும்பிக் கொண்டிருந்த நானும் என் நண்பன் சுந்தரமும் முண்டியடித்து நுழைந்து வேடிக்கை பார்த்ததும் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகும் ஞாபகத்துக்கு வருகின்றன.

மண்டை ஓடு, மை டப்பா, உடுக்கு, கருப்புத்துணி ஆகிய உபகரணங்களுடன் ஒருசின்னப் பையனையும் வைத்துக் கொண்டு தன் தொழில் நுணுக்கத்தைக் காட்டிய அந்தச் செப்பிடு வித்தைக்காரன் இப்போது பூமிக்குக் கீழே கிடக்கிறானோ.... மேலே நடக்கிறானோ....! அவன் எங்கே இருந்தாலும் அவன் தொழில் இந்தத் தேசத்தின் எல்லாத் திசைகளிலும் செழித்து வளர்கிறது. அவன் குரல் எங்கெங்கும் கேட்கிறது... வா, இந்தப் பக்கம்..... வா, இந்தப்பக்கம்.

●

பல பத்திரிகைகளின் நடுப்பக்கங்களில் நட்சத்திரங்கள் ஜொலிக்கின்றனர். அவர்களின் 'நாயகி நாயக' 'பாவம்' வாசகர்களை 'வா இந்தப் பக்கம்' என்று சுண்டி இழுக்கின்றன. பாவம் எப்படியோ, பாவம் நம் வாசகர்கள்!

சினிமா உலகின் தேவரகசியங்களைத் தெரிந்து கொள்வதற்காக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பத்திரிகையைப் புரட்ட வேண்டியதிருக்கிறது. பத்திரிகை படிக்கத் தெரியாதவர்கள் பாக்கியசாலிகள் என்று அவசரப்பட்டுச் சொல்லி விடவேண்டாம்... அவர்களுக் காகத்தானே சுவரெங்கும் புதுப்புது போஸ்டர்கள்....

'தேனீக்களைப் போல் இரைச்சலிட்டுக் கொண்டும் நத்தையைப் போல் ஊர்ந்தும் பாம்பைப் போல் வளைந்தும் அரிசிக் கடையை நோக்கி மக்கள் வரிசை சென்றது' என்று கே.ஏ. அப்பாஸ் ஒரு கதையில் எழுதினார்.

நம் தமிழ் நாட்டில் அரிசிக்கும் மண்ணெண்ணெய்க்கும் நிற்கும் வரிசையின் நீளத்தை விட ரஜினி கமல் படங்களுக்கு நிற்கும் வரிசையின் நீளம் பெரிது; அவர்கள் கலாரசனையின் ஆழம் இன்னும் பெரிது.

ஒரு நாள் எம்.ஏ. படிக்கும் என் இளவல் வேடிக்
யாய்ச் சொன்னான்: ''சிலப்பதிகார வகுப்புக்கு
அடித்துவிட்டு நண்பனுடன் மாதவி நடித்த 'ராஜபார்வை
பகல் காட்சிக்குப் போனேன். படம் விட்டுத் திரும்
போது சிலப்பதிகாரம் கற்பிக்கும் பேராசிரியப் பெருமக
வாசலில் நிற்கிறார்- முதற்காட்சி பார்க்க...''

'மாணவர் ஆசிரியர் ஒற்றுமை ஓங்குக' என்று நா
மெல்லச் சிரித்தேன்.

சர்வவல்லமை ஆண்டவனுக்கு இருக்கிறதே
இல்லையோ, அன்றன்று புற்றீசல் போல் வெளிவரும்
சினிமாவுக்கு இருக்கவே செய்கிறது.

மறந்து போயிருந்த மகாத்மாவுக்குக் கூட ஒரு பு
மரியாதை ஏற்பட்டிருக்கிறதே... காரணம் சினிமா தானே

இந்த மகாத்மாவுக்கு ராட்டையைச் சுற்றத் தெரிந்த
தவிர சினிமாவுக்குள்ள சீர்த்தியும் கீர்த்தியும் தெரி
வில்லையே....

ஒழுங்காய் அன்றைக்கே ஒரு ஊமைப்படத்தி
நடித்திருந்தாலும் போதுமே.... கிங் பெங்க்ஸ்லியின்
இடத்தைக் கெட்டியாகப் பிடித்திருக்கலாமே!

இந்திரா காந்திக்குப் பிறகு பிரதமர் ராஜீவ் என்று சி
பத்திரிகைகள் எழுதினால் சம்பந்தப்பட்டவர்கள் அ
வெறும் ஹேஸ்யம் என்று பதில் சொல்கிறார்கள்.

என்னைக் கேட்டால் அது வெறும் 'ஹாஸ்யம்
என்பேன்.... இந்திரா காந்திக்குப் பிறகு பிரதமர் அமிதாப்
என்றால் அது ஹேஸ்யம் என்று ஒப்புக் கொள்ளலாம்..
இனிமேல் ஒரு நடிகரைத் தவிர வேறுயாரும் பிரதமர்
ஆகமுடியும் என்று நினைத்துப் பார்ப்பதே ஒரு ஹாஸ்யம்

தான் ஓ.... நீங்கள் பிரதமர் ஆக வேண்டுமா; பிரபலம் அடைய வேண்டுமா... ஒரே வழி சினிமாதான்!

●

இப்போது கண்டபோது மயக்கம் தரும் சினிமாவோடு உண்டபோது மயக்கம் தரும் சாராயமும் கிடைத்து விட்டது. தமிழர்கள் அதிர்ஷ்டசாலிகள்!

ஊருக்கு வெளியே நிற்கும் கைகாட்டி மரங்கள் வழிப் போக்கர்களுக்கும் வாகனாதிகளுக்கும் பாதை காட்டுகின்றன. புதிதாய் ஊருக்குள்ளே பல சந்து முனைகளில் அம்புக்குறியோடு கைகாட்டிமரங்கள் முளைத்துள்ளன; 'வா இந்தப் பக்கம்.... இது தான் சாராயக்கடைக்குவழி' என்று அன்போடு அழைக்கின்றன. இந்தத் 'தண்ணீர் தண்ணீர்' விசிறிகளுக்கு வீட்டுக்குப் போகும் வழி காட்ட எந்தக் கம்பமும் இல்லை; கைகாட்டியும் இல்லை.

'கோப்பையிலே என் குடியிருப்பு' என்று கவிஞர் பாடினார்... இன்று குடியிருப்புகள் இருக்கும் தெருக்களில் எல்லாம் கோப்பை வாசனை குபுகுபுவென்று வருகிறது. எனக்கொரு யோசனை...

கடைவீதிகளில், கல்லூரி பள்ளிக்கூடப் பகுதிகளில் கள்ளுக் கடை, சாராயக் கடை நடத்த இடம் கொடுக்காமல் சுடுகாட்டுக்குப் பக்கத்தில் இடம் கொடுக்கலாம்.

அங்கே வரும் குடிமக்களை 'வா, இந்தப் பக்கம்' என்று சுடுகாடு பந்தத்தோடும் பாசத்தோடும் எளிதாய் அழைக்க முடியுமல்லவா?

●

'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று பாரதி பாடினார்... மகாபாரதத்தில் ஒரு மன்னர் சூதாடினான் என்றால் நம் நவபாரதத்தில் ஒவ்வொரு மன்னனும் சூதாடும் ஒரு புதுயுகம் - கிருதயுகம் - கிளர்ந்தெழுந்து விட்டது.

அன்று தருமனோடு சகுனி சூதாடினான் என்றால் இன்று மக்களோடு சகல மாநில அரசுகளும் போட்டி போட்டுக்கொண்டு சூதாடுகின்றன, 'பரிசுச்சீட்டு' என்னும் நவநாகரிகப் பெயரில், ஒரு லட்சம், பத்து லட்சம் போன்ற அற்பத் தொகைகளை உதறி விட்டு ஒரு கோடி, இரண்டு கோடி என்று கவர்ச்சியாகப்பரிசை உயர்த்தி, வா இந்தப் பக்கம் என்று ஒவ்வொரு மாநிலமும் அழைக்கிறது.

ஒரு காலத்தில் நெடுஞ்சேரலாதன், நெடுஞ்செழியன், செங்குட்டுவன் போன்ற தமிழ் அரசர்கள் வடக்கே படையெடுத்து வாகை சூடினார்கள் அல்லவா?

பதிலுக்குப் பழி தீர்த்துக்கொள்ளும் வகையில் ராஜஸ்தான், உ.பி., ஒரிசா போன்ற வட மாநிலங்கள் தமிழகத்தை வளைத்துப் பிடிக்கின்றன.

லாட்டரி ஏஜெண்டுகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் உயர்ந்துவிட்டது. ஒரு குபேர ஏஜெண்டுக்குக் கீழே எத்தனையோ குட்டி ஏஜெண்டுகள், குண்டூசியில் குத்திய சின்னச்சின்னக் கொடி களைப் போல் சீட்டுகளை தூக்கிப் பேருந்துநிலையம், ரயில் நிலையம் என்று மக்கள்கூடும் இடங்களில் எல்லாம் திரியும் சிறுவர்கள்... இவர்கள் நினைத்தால் ஒருகட்சியே தொடங்கலாம்... ஆட்சியைப் பிடிக்கலாம். கோடிகோடியாய் பரிசுச் சீட்டுகளை வாரிவழங்கும் இந்த வள்ளல்களுக்கு வாக்குச் சீட்டுகள் நவியாதா என்ன?


ஒரு பக்கம் சினிமா 'வா இந்தப் பக்கம்' என்கிறது.... ஒரு பக்கம் சாராயம் வா இந்தப்பக்கம் என்கிறது. ஒரு பக்கம் லாட்டரி வா இந்தப்பக்கம் என்கிறது.

இதற்கிடையில் சிந்தனையை நோக்கி - ஒழுக்கத்தை நோக்கி - உழைப்பை நோக்கி 'வா இந்தப் பக்கம்' என்று நான் கூப்பிட்டால் 'சாருக்கு எந்தப் பக்கம்' என்று நம் பச்சைத் தமிழர்களிடமிருந்து பதில் வராமல் இருக்காது.

எதற்கு வம்பு? பேசாமல், பெரியவை பற்றிப் பிலாக்கணம் பாடாமல் சிறியவை பற்றிச் சிந்திப்போமாக.

❖

*2.11.83*



# நமக்கு தொழில் கவிதை

நான்கைந்து மாதங்களுக்கு முன்பு இந்தியன் எக்ஸ்பிரஸ் ஞாயிறு இதழில் கவிதை பிரிட்டனில் ஒரு பெரும் வியாபாரமாக வளர்ந்து விட்டது என்று சலீம் பீராடினா ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

மூன்றாம் உலகநாடுகளின் புத்தகச் சந்தை சார்பில் நடைபெற்ற சர்வதேசக் கவிசம்மேளனத்தில் கலந்து கொண்டு திரும்பிய கவிஞர் இவர்.

சென்னையில் உள்ள நம் நாடக சபாக்கள் போல் லண்டனிலும் அதைச் சுற்றிலும் சுறுசுறுப்பாக இயங்கும் முப்பதுக்கு மேற்பட்ட கவிஞர் குழுக்கள் இருக்கின்றனவாம்.

கவிஞர்களின் சந்திப்பு நிகழ்ச்சிகள் அடிக்கடி நடக்கின்றனவாம்.

நேரடி வாசிப்பு அல்லது விவாதம் அல்லது படைப்புப் பட்டறை இவற்றில் ஏதேனும் ஒன்று அங்கே சாதாரணமாம்.

ஆவன் அறநிறுவனம் ஆண்டு தோறும் ஏற்பாடு செய்யும் தேசிய கவிதைப் போட்டியில் பங்கு பெறுவோர் தொகை கூடி வருகிறதாம். நுழைவுக் கட்டணம் கவிதை ஒன்றுக்கு ஒரு பவுன் என்று வைத்தும் ஒருலட்சத்துக்கும் மேல் வசூலாகி விட்டதாம்

●

பிரிட்டனில் மட்டுமல்ல. இங்கேயும் கூட கவிதை பல்லாயிரம் பேர் பங்கு கொள்ளும் ஒரு பெருந் தொழில் என்று கண்டு கொள்ளப்பட்டு விட்டது.

அரசியல்வாதிகள் இனி அரசியலில் லாபம் இல்லை என்று எண்ணிக் கவிதைப் பக்கம் வரப்போகிறார்கள்.

அண்மையில் 'அவசர நிலையின் குரல்கள்' (Voices of Emergency) என்ற பெயரில் ஆங்கிலத்தில் கவிதைத் தொகுப்பு ஒன்று பம்பாயிலிருந்து வெளிவந்துள்ளது.

தமிழ் உள்ளிட்ட பல இந்திய மொழிகளிலிருந்து 280 கவிதைகள்-1975-77 அவசரநிலையை எதிர்த்துக்குரல் கொடுத்த கவிதைகள்-இதில் தொகுக்கப்பட்டுள்ளன. மொத்தம் 300 பக்கங்கள்... விலை ரூபாய் 150.

இவ்வளவு விலை மதிப்புள்ள புத்தகம் வெளிவர உதவியிருக்கிறதே அந்த ஒன்றுக்காகவாவது அவசர நிலைக் காலத்தை மன்னிக்கலாம்.

இன்னொரு அதிசயம்-இதில் ஜெயப்பிரகாசர், வாஜ்பாய் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. அரசியல்

வாதிகளைக் கவிஞர்களாக்க தொகுப்பாசிரியர் ஜான் ஆலிவர் பெர்ரி ஆசைப்பட்டிருக்கிறார். பிரயாசைப் பட்டிருக்கிறார்.

ஜெயப்பிரகாசர் போய்விட்டார்... வாஜ்பாய்க்கு வாய்ப்பு இருக்கிறது.

அரசியல் வியாபாரம் மந்தமாவது தெரிந்தால் கைவசம் இன்னொரு தொழில் இருக்கிறது. எந்த வினாடியிலும் கவிதையைக் கவனிக்கலாம்.

●

பிற்காலத்தில் படிக்காசுப் புலவர் கஞ்சர்களிட மெல்லாம் கையேந்த வேண்டிய காலக் கொடுமையை நினைத்து ஒரு கவிதை பாடியிருக்கிறார். பேசாமல் கழைக் கூத்தாடியாகவோ, செப்பிடு வித்தைக்கார னாகவோ பிறந்திருக்கலாம்... அல்லது விலை மகளாகப் பிறந்திருக் கலாம்... அல்லது பெண்களுக்குத் தூது சென்றாவது பிழைத்திருக்கலாம்... இப்படிப் பல தொழிலுமிருக்க என்ன பிழைப்பு என்று இந்தச் 'சனியான தமிழைக்' கட்டிக் கொண்டு கவிபாட வந்தேன் என்று நொந்திருக்கிறார்.

புலவர் பெருமான் இப்போது புறப்பட்டு வந்தால் அந்தக் கவலை அவசியமற்றது என்று புரிந்து கொள்வார்.

'தமிழை விட்டு' வேறு எந்தத் தொழிலையும் செய்ய வேண்டிய அவசியமில்லை. தமிழை விற்று படிப் படியாகக் காசை அளந்து குவிக்கப் பலவழிகள் இல்லாமல் இல்லை.

மாதம் நான்கைந்து கவியரங்கங்களுக்குத் தலைமை ஏற்க இசைந்தால் போதும்; இருநூறு முன்னூறு என்று கொடுப்பதற்கு இலக்கிய மன்றங்கள் தயாராக உள்ளன.

பத்துப் பன்னிரண்டு கவிதைகள் கைவசம் இருந்தால் போதும்... அந்தந்த இடத்துக்குத் தகுந்தாற் போல வெட்டியும் ஒட்டியும் வெளுத்துக் கட்டிவிடலாம்.

''வரும்படி என்னை அழைத்தார் செயலாளர்
வீட்டுக்குப் போனதும்
வரும்படி எவ்வளவு எனக்கேட்டு அணைப்பாள்
என சேயிழையாள்''

என்று அவையடக்கத்திலேயே வந்த நோக்கத்தை மனந்திறந்து சொல்லி விட்டால் கை நிறையக் கிடைக்கும்.

மணவிழாவில் கவியரங்கம்.... மணிவிழாவில் கவியரங்கம்... வானொலியில் கவியரங்கம்... வள்ளுவர் கோட்டத்தில் கவியரங்கம்... பிறந்த நாள் கவியரங்கம்.... நினைவு நாள் கவியரங்கம்... இப்படி எத்தனை கவியரங் கங்கள்! புலவர் பெருமான் வந்தால் பூரித்துப் போவார்.

வர்த்தக ஒலிபரப்பு, வர்த்தகக் கலை என்பதைப்போல் கவிதையும் வர்த்தகக் கவிதை ஆகக்கூடாதா என்ன?

ஓவியர்கள் பெரிய பெரிய பேனர்களில் படங்களை வரைந்து கொடுப்பதைப்போல் படிக்காசுப் புலவர் விளம்பர வாசகங்களை எழுதிக் கொடுத்துச் சம்பாதிக்கலா மல்லவா?

For men of action - Satisfaction என்று ஒரு சிகரெட் கம்பெனி விளம்பரம் செய்திருக்கிறது, கவிதை நடையில்.

அதே போல் -

ஏதோ ஒரு இஸபெல்லா சோப் என்று வைத்துக் கொள்வோம்... 'மேனியில் குளிர்ச்சி, முகத்தில் மலர்ச்சி, உள்ளத்தில் கிளர்ச்சி' (சே.. வார்த்தை நன்றாகத்தான் வந்து விழுகிறது. இதற்காகவே ஒரு சோப் கம்பெனி

தொடங்கலாம் போலிருக்கிறது) என்று எழுதிக்கொடுத்து ஒரு நூறுவெண் பொற்காசுகளாவது பெறலாமல்லவா?

மறந்து விட்டேன் பார்த்தீர்களா...?

படிக்காசுப் புலவர் இப்போது வந்தால் படத்துக்குப் பாட்டெழுதி ஆயிரம் இரண்டாயிரம் என்று சம்பாதிக் கலாம்... கவிஞர் கண்ணதாசனின் இடம் காலியாக இருக்கிறதே!

தம்பி வைரமுத்து படிக்காசு வருவதைப் பற்றி வருத்தப்பட மாட்டார். 'நீங்கள் எல்லாம் படத்துறைக்கு வர வேண்டும்' என்று மூத்த கவிஞர்களைப் பார்க்கும் போதெல்லாம் முகமலர்ச்சியோடு சொல்லக்கூடியவர். சீனியருக்கும் சீனியரான படிக்காசு வந்தால் விடுவாரா?

கவிஞர் மு.மேத்தா தலைமையில் புதிதாய்த் தொடங்கப் பெற்றுள்ள தமிழகக் கவிஞர் பேரவை ஒவ்வொரு வருடமும் சிறந்த கவிதைத் தொகுதிக்கு 5000 தரப் போகிறதாம்.

கார் தட்டிய பஞ்சகாலத்தைப் பற்றிய தம் தனிப்பாடல்களைத் தொகுத்து முப்பது நாற்பது பக்கத்துக்கு வாசகர்களின் முன்னுரை பின்னுரையோடு வெளியிட்டுப் பரிசைத் தட்டிக்கொண்டு போகலாமே! (பெரிய மனது வைத்து மேத்தா இந்தப் போட்டியில் பங்கு கொள்ளக் கூடாது என்பது நம் வேண்டுகோள்)

படிக்காசுக்கு என் கைவசமிருக்கும் கடைசி யோசனை. கவிதைக்காக ஒரு தனிப்பயிற்சிக் கல்லூரி நடத்தலாம். பத்திரிகைகளுக்கு கவிதைகள் அனுப்பி அவை வெளிவராமல் தோல்வியடைந்த மாணவனைப் போல் சோர்ந்து போயிருக்கும் கவிஞர்கள் இங்கே ஏராளம்.

அவர்களுக்குப் 'பத்திரிகையில் கவிதை எழுதுவது எப்படி' என்று பாடம் நடத்தலாம். பொருட் குற்றம் சொற்குற்றம் போன்றவற்றைக் களைந்து கொடுப்பதற்கு நக்கீரரையும் துணைக்கு வைத்துக் கொள்ளலாம். பிரிட்டனில் கவிதைக்காக 'என் கவுண்ட்டர்' (Encounter) என்னும் இதழ் வெளிவந்து இப்போது நின்று விட்டதாகத் தெரிகிறது. முன்பு கவிஞர் சுரதா காவியம், இலக்கியம், விண்மீன், சுரதா என்று தொடர்ந்து கவிதை இதழ்கள் நடத்தினார். புதுக் கவிதைக்காக கோவையிலிருந்து வந்த 'வானம்பாடி' பரபரப்பாகப் பேசப்பட்டது. வேறு சில பத்திரிகைகளும் அவ்வப்போது தோன்றி மறைகின்றன.

இவையெல்லாம் ஆயிரம் பிரதிகளுக்குக் குறைவாகவே அச்சிடப்படுகின்றன. எதிர்காலத்தில் எந்தக் கவிதைப் பத்திரிகையும் ஒரு லட்சம் இரண்டு லட்சம் என்று அழியும் என்பது என் ஊகம்.

மலையாளத்தில் வாசகர்களைக் காட்டிலும் எழுத்தாளர் கள் அதிகம் என்பதைப்போல் இங்கே கவிஞர்களின் எண்ணிக்கை அதிகம். அவர்கள் ஒவ்வொருவரும் தன் கவிதை வெளிவந்தி ருக்கிறதா என்று பார்ப்பதற்காக வாவது பத்திரிகை வாங்கியாக வேண்டும்.

எனவே சோதிடத்துக்கும் சினிமாவுக்கும் தனியாக ஒரு பத்திரிகை தொடங்கும் பெரும் பத்திரிகை முதலாளிகள் நம்பிக்கையோடு கவிதைக்கும் ஒரு பத்திரிகை ஆரம்பிக்கலாம்.

மலையாளத்தில் வள்ளத்தோள் கவிதைகள் பதிவு செய்யப்பட்ட கேசட் விற்கிறதாம். தமிழில் எம்.எஸ். பாடிய பாரதி பாடல்களில் கேசட் வந்துவிட்டது. இனி புதுக்கவிதைகள் பல கேசட்டாக வெளிவரும் காலம் வரும்.

''மௌனத்தின் பூமியைப்
பெருமூச்சுகளால் கீறி துக்க விதைகளை இட்டு
உயிர் நிரம்பிய தாகங்களை ஊற்றிக்
கவிதைகளை வளர்ப்பேன்''

என்பது போன்ற அபியின் 'மௌனத்தின் நாவுகள்' கவிதைகளைப் பதிவு செய்து கட்டபொம்மன், மனோகரா வசனம்போல் தெருவில் போவோர் வருவோர் செவிப்படலம் கிழிய ஒலிபரப்பக்கூடும்.

மக்கள் பெருக்கம் வரவர அதிகரிப்பதால் கடற்கரைக்குப் போனால் இனிமேல் காற்று வாங்க முடியும் என்ற உத்தரவாதம் இல்லை. ஆனால் கவிதை வாங்க முடியும்!

ஒவ்வொரு சிலைக்கு அடியிலும் கவிஞர்கள் தங்கள் கவிதைகளை அரங்கேற்றும் போது சூடு தணியாமல் அவற்றை விலை கொடுத்து வாங்கலாம். சுவைக்கலாம். ''கவிதை வாங்கப் போனேன் - கொஞ்சம் காற்றுவாங்கி வந்தேன்'' என்றுபாடும் காலம் வரத்தான் போகிறது. மொத்தத்தில் கவிதை தன்னிச்சையாகப் பெருக்கெடுக்கும் ஊற்று என்பது போய் அது செயற்கை மழை என்ற நிலைக்கு வந்துவிட்டது. அது Art - கலை என்பதிலிருந்து Craft - ஒருவகைக் கைத்தொழில் என்று சொல்லும்படி மாறிக் கொண்டிருக்கிறது.

'இங்கே ஜாதகம் கணித்துக் கொடுக்கப்படும். சோதிடம் பார்க்கப்படும்' என்பது போல இங்கே தீபாவளி பொங்கல் பண்டிகைக் கவிதைகள், மந்திரிகளுக்கு வரவேற்புக் கவிதைகள், திருமணம், காதுகுத்து போன்ற வைபவக் கவிதைகள் கிடைக்கும் என்று வருங்காலத்தில் கவிதைக் கடைகள் திறக்கப்படலாம்.

தேவையை ஒட்டி நூற்றுக்கு மேற்பட்ட கவிஞர்கள் பணியாற்றும் கவிதைத் தொழிற்சாலை தொடங்கப் பெறலாம்.

பள்ளி கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் விண்ணப்பங்களில் அப்பாவின் தொழில் என்பதற்கு இதுவரை யாரும் 'கவிஞர்' என்று குறிப்பிடுவதில்லை. எவ்வளவு புகழ் வாய்ந்த கவிஞராக இருந்தாலும் அவர் பார்க்கக்கூடிய ஏதாவது ஒரு வேலைதான் தொழிலாகக் கருதப்படும்.

பாவேந்தர் பாரதிதாசனின் வாரிசுகள் கூட விண்ணப்பங்களில் அப்பாவின் தொழில் என்பதற்கு 'வாத்தியார்' என்று தான் எழுதியிருப்பார்கள்.

வாத்தியார் கனகசுப்புரத்தினம் என்றால்தானே புதுச்சேரிக் காரர்களுக்கே விளங்கும்.

இனி ஆசிரியர், தச்சர், கொல்லர், மருத்துவர் போன்ற தொழிற் பெயராகவே 'கவிஞர்' என்ற பெயரும் ஏற்றுக் கொள்ளப்படும்.

●

கவிதையில் தனக்குள்ள நேயத்தையும் நெருக்கத்தையும் வைத்து மகாகவிபாரதி 'நமக்குத் தொழில் கவிதை' என்று பாடினார். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்னும் கருத்தின் அடிப்படையில் கவிதையை வணக்கத்துக்குரிய ஒன்றாகக் கருதினார். வருவாய்க் குரிய ஒன்றாகக் கருதவில்லை.

காலம் மாறிக் கொண்டிருக்கிறது.

கி.பி. இரண்டாயிரத்தில் பாரதி வந்தால் அவரை வரவேற்கத் திரண்டிருக்கும் கூட்டத்தில் நூற்றுக்குப்

பத்துபேர் 'நமக்குத் தொழில் கவிதை' என்று கோரஸ் பாடுவார்கள்.

பாவம், பாரதி என்ன சொல்ல முடியும்? என்ன செய்ய முடியும்?

❖

*9-11-83*



# கண்டனன் காலினுக்கு அணியை....!

வைகை எக்ஸ்பிரஸ் திருச்சியைத் தாண்டிய பிறகுதான் கவனித்தேன்.

அதே தோல்! அதே நிறம்! அதே மாதிரி நகம் மட்டும் வெளியில் தெரியும்படி கட்டை விரலுக்குக் கவசம்!

எள்ளளவும் சந்தேகமில்லை, என்னுடையதுதான்.....

வண்டி வேகமாகப் போகிறது. ஆனந்தம் - ஆத்திரம் இரண்டுக்கு மிடையில் என் மனம் அலைபாய்கிறது. 'கண்டனன் காலினுக்கு அணியை .....!' என்று ஸ்ரீராம பக்த அனுமார் என்னுள்ளிருந்து கத்துகிறார் ...

என்னைப் பிரிவுத்துயருக்கு ஆளாக்கிவிட்டு அந்த ஜோடிப் புறாக்களைக் கடத்திக் கொண்டு வந்த ஆள் என்

எதிரே கால் மேல் கால்போட்டுக் கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறான். பறிகொடுத்தவன் பக்கத்தில் இருக்கிறானே என்று கூடக் கொஞ்சமும் கூச்ச நாச்சமில்லாமல் வாட்ட சாட்டமாக உட்கார்ந்திருக்கிறான்.

இவ்வளவு எடுப்பாக உடுப்பணிந்திருக்கும் இந்த ஆளா இந்தக் காரியத்தைச் ... ... செய்திருப்பான்? ... ... செய்திருப்பான்... எந்தப் புற்றில் எந்தப் பாம்போ? பெரிய அரசாங்க அதிகாரி போல 'இந்து' பேப்பரில் முகம் புதைத்திருக்கிறான். அப்படி என்ன ஆழமான விஷயம்... சுவாரஸ்யம் ... ஈரான் ஈராக்கா?...

நல்ல படிப்பாளிதான் போ, தெரியும் உன்னை! முகத்தை எடும்... 'கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் செருப்பு!' என்று சின்னப் பையன் சீனு உன்னை நினைத்துத்தான் உருப் போட்டானோ?

பாவீ, நீ செய்தது நியாயம் தானா? அற்பம், அற்பம். அந்த இராவணன் வம்சமா நீ, இருக்கலாம் ... பார்த்தால் தெரிகிறதே... அவனாவது வனாந்தரத்தில், ஆளரவம் இல்லாத இடத்தில் சீதையைக் கடத்திப் போனான். வாசலில் நூற்றுக்கணக்கில் குவிந்து கிடக்கும் அந்தக் கல்யாண மண்டபத்தில் எவ்வளவு பெரிய சந்தடியில் சத்தமில்லாமல் குறிவைத்து என் காலணியைக் கவர்ந்து சென்று விட்டாய் நீ!

சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களும் பெரியோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களும் .... எல்லாமே இந்த ஆவணி மாதத்தில் தானா இதற்கு ஒரு கட்டுப்பாடு இல்லையா... திருமணங்கள் பெருகப் பெருக செருப்புத் திருடர்கள் அல்லவா பெருகிப் போகிறார்கள்.

அரசாங்கம் இதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. உடுக்கை இழந்தவனுக்கு

உதவும் கைபோலச் செருப்பை இழந்தவர்களுக்கு எப்படி உதவுவது என்று சிந்திப்பதாகத் தெரியவில்லை.

வாங்கி இரண்டு வாரம் கூட ஆகவில்லையே ... புத்தம் புதுசு... சரியாகக்கூடப் போட்டு அனுபவிக்கவில்லையே ... அது அனுமதிக்கவில்லையே... காலில் மாட்டும் போதெல்லாம் கடித்தது. கஷ்டப்படுத்தியது. இருந்தும் எவ்வளவு பெருமையாக அதை அணிந்து கொண்டு ஏறுபோல் பீடுநடை போட்டேன்.

இந்த ஆள் எடுக்கும்போது சும்மாவா இருந்திருக்கும். கடித்திருக்க வேண்டுமே... அவன் கத்தியிருக்க வேண்டுமே... என்னையே எவ்வளவு கடித்தது... சனியன், அந்நியன் கால் பட்டதும் வெட்கத்தில் பேசாமல் இருந்துவிட்டதோ? இருக்காது... அவன் கைகளில்தான் தூக்கியிருக்கவேண்டும். கூட்டத்தில் யாரும் கவனிக்க வில்லையோ... காலில் மாட்டுவதைக் கையில் எடுக்கிறானே என்று யாரும் சந்தேகப்படவில்லையோ? ஏதேனும் அரசியல் கட்சித் தொண்டனாக இருக்கப் போகிறான் என்று பயந்து சும்மா இருந்திருப்பார்களோ!

அவனைச் சொல்லிக் குற்றமில்லை. . . ஊராரைச் சொல்லியும் குற்றமில்லை . . . எல்லாம் என் தப்புத்தான். மணமக்களை வாழ்த்த வேண்டும் என்று என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டவுடன் ஏன் கழற்றிப் போட்டுவிட்டு ஓட வேண்டும்! மணமேடைக்குச் செருப்புப் போட்டுக் கொண்டு போகக்கூடாது என்று ஏதாவது விதி இருக்கிறதா என்ன ... எல்லாம் இந்தத் தமிழால் வந்த வினை ... தமிழ் படித்தால் வாழ்த்தித்தான் ஆகவேண்டுமென்று சட்டம் போட்டிருக் கிறார்களா . . .! அப்படி ஒன்றும் அதிகமாகக் கூட முழங்கவில்லை. 'நகமும் சதையும் போல, வானும் நிலவும் போல' என்று கையிருப்பில் உள்ள இரண்டு

வார்த்தைகளை உதிர்த்துவிட்டு ஓடிவந்து விட்டேனே ... அந்தச் சில நிமிடங்களில் கால்வைத்து விட்டானே, சண்டாளன்! 'நல்ல சமயமடா இதை நழுவவிடாதேயடா' என்ற தண்டபாணி தேசிகரின் குரல் அவனுக்கு அசரீரியாகக் கேட்டதோ... தேசிகரும் அவனும் ஒரே ஊரோ... தூரத்து உறவோ...

வெள்ளைக்காரன் மகா கெட்டிக்காரன். பிரிய அவசிய மில்லாத காலணிகளைக் கண்டுபிடித்திருக்கிறானே. காலனி பல கண்டவனாயிற்றே... அதனால் தான் பூட்சை - காலணியைக் கழற்றாமல் மாட்டிக்கொண்டு தியேட்டரிலும் தேவாலயத்திலும் வீட்டிலும் வெளியிலும் சுதந்திரமாக நடக்கிறான் . . .

இதெல்லாம் எதற்கு .....? எல்லாக் கல்யாணங்களுக்கும் போகவேண்டும் என்ற கட்டாய மில்லை என்று என் மனைவி தடுத்தாளே... 'மதுரையில் செருப்புத் திருட்டு அதிகம் ... போவ தென்றாலும் பழைய செருப்பை போட்டுக்கொண்டு போங்கள்' என்று சொன்னாளே... கேட்டேனா? மதுரை கோவலனை மட்டுமல்ல என்னையும் வஞ்சித்து விட்டதே! கோவலன் கொடுத்து வைத்தவன் ... தலை போனாலும் அவனுக்கு ஒரு சிலப்பதிகாரம் கிடைத்ததே... யாரேனும் எனக்காக ஒரு செருப்பதிகாரம் பாடக் கூடாதா, இளங்கோவா பிறந்து வரப் போகிறார்?

மனைவி சொன்னபடி பழைய செருப்பைப் போட்டுப் போயிருந்தால் இப்படிப் புலம்பும்படி ஆகியிருக்காதே... 'மனைவி சொல் மிக்க மந்திரமில்லை' என்பது இப்போது தான் புரிகிறது. மந்திரி மாதிரி யோசனை சொன்னாளே... நான் மந்திரியானால் ... கோவில்களில் பாதுகைகளுக்கு எவ்வளவு பாதுகாப்பு இருக்கிறது. இல்லாவிட்டால் ஆண்டவனின் திருவடிகளைவிட்டு பக்த கோடிகளின்

மனம் தம் மிதியடிகளையல்லவா நினைத்துக் கொண்டிருக்கும்.

நான் மந்திரியானால் ... கோவில் வாசல்களில் செருப்புக்கு 'டோக்கன்' கொடுப்பது போல் கல்யாண வீட்டு வாசலிலும் டோக்கன் கொடுக்கும் திட்டத்தை அமுல் நடத்துவேன். அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வரதட்சணை கொடுத்துத் தளர்ந்து போயிருக்கும் பெண்ணின் தந்தைக்கு ஊக்கத் தொகையாக வழங்கச் செய்வேன்....

இப்படி நல்லநல்ல திட்டங்கள் இருப்பது தெரிந்தால் மக்கள் என்னைக் கவனிக்காமல் விடமாட்டார்கள். மந்திரியாக்காமல் விடமாட்டார்கள் ... தேர்தல் எப்போது? பிப்ரவரியிலா... வரட்டும்... இந்தத் தடவை நின்றுவிட வேண்டியது தான்.

உள்ளே, வெளியே (In - Out) என்று எழுதப்பட்ட பலகை இல்லாத வீடுகளில் செருப்புத்தானே அடையாளச் சின்னமாக இருக்கிறது. கேரளத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்புப் பெண்கள் பலகணவர் முறையைக் கைக்கொண்டிருந்த காலத்தில் வீட்டின் வெளியே செருப்பு இருந்தால் உள்ளே ஒரு கணவன் இருக்கிறான் என்று அடுத்த கணவன் நுழையாமல் போய்விடுவானாமே...

இந்தமாதிரி ஆளாக இருந்தால் உள்ளே நுழைகிறானோ இல்லையோ இதுதான் தருணமென்று வெளியே கிடக்கும் செருப்பை வேகமாகத் தூக்கி சென்றுவிடுவான்...

சின்ட்ரல்லா கதை மாதிரியல்லவா என் கதை இருக்கிறது. சின்ட்ரல்லா செருப்பால் ராஜகுமாரி ஆகவில்லையா? தேவதை தந்த செருப்பு யாருக்குப் பொருந்துகிறதோ அவள் என் அரசி என்று அந்த தேசத்து அரசன் சொல்ல ... சிற்றன்னைக் கொடுமைக்கு ஆளான

அந்த அனாதைப் பெண்ணுக்கு அந்தச் செருப்பு பொருந்த... சின்ட்ரல்லாவுக்கு தேவதையின் செருப்பு பொருந்தியது மாதிரியல்லவா இந்தப் பாவிக்கு என் செருப்பு பொருந்தி யிருக்கிறது.....

கேட்டால் "உன் செருப்பு மாதிரி உலகத்தில் ஒரே ஒரு செருப்புத்தானா? உன் அளவு ஒன்பதா? பாட்டா கம்பெனி யிடத்தில் போய்க் கேள்... ஒன்பதில் இந்த வருடத்தில் எத்தனை செருப்புத் தயாரித்தீர்கள் என்று...." என்று ஏதாவது பதில் சொல்லி விடுவான்....

இதற்குத்தான் ஒவ்வொரு செருப்பும் இன்னொன்றைப் போல் இல்லாமல் தயாரிக்க வேண்டும் என்பது ... நான் மந்திரியானால், இதற்கும் ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும்.

இதோ எழும்பூர் வந்துவிட்டது.

எவ்வளவு லாகவமாக என் செருப்பை மாட்டிக் கொண்டு இறங்குகிறான்... நானும் பின் தொடர்கிறேன். கையில் இந்து பேப்பர், ஃப்ரீப்கேஸ் சகிதம் டிக்கட்டைக் கொடுத்துவிட்டு வெளியேறுகிறான்! பரவாயில்லை... டிக்கட் எடுத்திருக்கிறான்.

நானும் வெளியே வருகிறேன். அவன் நடக்கும்போது என் செருப்பை ஏக்கத்தோடு பார்க்கிறேன். வெயில் கொளுத்துகிறது. இந்த வெயிலில் என் செருப்பு என்ன பாடுபடுமோ...

17D வருகிறது. அவன் வேகமாக ஓடிப்போய் ஏறுகிறான்.

ஃபுட்போர்டில் கடைசியாக பிரியப் போகும் என் செருப்பைப் பார்க்கிறேன்.

என் வேதனை பன்மடங்காகிறது ... மனம் உருகுகிறது ...


என் குரல் உன் காதில் விழவில்லையா .... உனக்குக் காது இருக்கிறதே. நீ காதறுந்த பழஞ்செருப்பு இல்லையே ... புதுச் செருப்பல்லவா... என்னிடமிருக்கும்போது முகம் பார்க்கலாமே... அவ்வளவு வலிவோடும் பொலிவோடும் இருந்தாயே ... கண்ணாடி போல் வைத்திருந்தேனே...

எவ்வளவு தேய்ந்து விட்டாய், எவ்வளவு மெலிந்து விட்டாய்...

எப்படியோ... நீ எங்கிருந்தாலும் வாழ்க!

❖

*15-11-83*



# பிழைகள் தரும் பேரின்பம்

ஐரிஸ் எழுத்தாளர் ராபர்ட் லிண்ட் எனக்குப் பிடித்த நல்ல எழுத்தாளர். (கவிஞர் நா. காமராசன் நடையில் சொல்வதென்றால் 'என் செல்ல எழுத்தாளர்') சின்ன விஷயங்களைக் கூட அதி அற்புதமாகவும் நகைச் சுவையுணர்வோடும் எழுதுவதில் வல்லவர்.

இலக்கிய சாம்ராட்கள் சிலர் தங்கள் கதை கவிதைகளில் செய்துள்ள வேடிக்கையான பிழைகளைச் சுட்டிக் காட்டி ஆங்கிலத்தில் மிக நளினமாய் ஒரு கட்டுரை எழுதியுள்ளார் லிண்ட்.

சேக்ஸ்பியருக்கு பூகோள ஞானமோ வரலாற்றறிவோ பூஜ்யமாம்; காலகட்டம் பற்றிய அவர் கணிப்புகள் எல்லாம் மிகமட்டமாம். சார்லஸ் லாம், ஹாஸ்லிட், ஸ்காட் போன்றவர்களின் எழுத்துக்களில் எவ்வளவோ பிழைகளாம். ஸ்காட் தம் நாவல் ஒன்றில் சூரியனை அதி காலையில் தவறான திசையில் உதிக்கச் செய்துள்ளாராம்!

ஜான்சன் தம் அகராதியில் சில வார்த்தைகளுக்கு வேண்டுமென்றே தப்பான பொருள் தந்துள்ளாராம்.

ஒத்தெல்லோ காலத்தில் வெனிஸ் நகரத்தில் மூர்இனத்தவன் எவனும் இருந்ததில்லை என்று ஒரு புதிய செய்தியை ஒரு சாதாரண ஆராய்ச்சியாளன் கண்டு பிடித்து விட்டால் போதும்... ஒத்தெல்லோவை மூர்இனத்தவனாகக் காட்டும் சேக்ஸ்பியரின் சரித்திர ஞானத்தைச் சந்தி சிரிக்க வைத்துவிடலாம் என்று அவன் பூரித்துப் போவானாம். 'டைம்' பத்திரிகையில் சேக்ஸ்பியரை ஒரு பிடி பிடித்துவிடலாம் என்று நினைப்பானாம்... அந்த நாடக மேதையைக் காட்டிலும் ஓர் அங்குலம் உயர்ந்து விட்டதாய்ப் பெருமைப்படுவானாம்.

இப்படிப் பிரபல எழுத்தாளர்கள் செய்த - செய்கிற பிழைகளை அறியும் போதெல்லாம் வாசகர்கள் ஒரு புது உற்சாகம் - உவகை அடைகிறார்களாம் ஆண்டுதோறும் அரசாங்கம் போடும் வரிகள் கொஞ்சநஞ்சமா? அவற்றிற்கு ஆளாகி வருந்தும் மக்களுக்கு எழுத்தாளர்களின் பிழை மணங்கமழும் வரிகள் - வாசகங்கள்தாம் ஆறுதல் அளிக்கின்றனவாம். நகைச்சுவை உணர்வு குறைந்து வரும் இக்காலத்தில் வாய்விட்டுச் சிரிக்க வேண்டுமானால் எழுத்தில், பேச்சில், பிழைகள் பெருக வேண்டுமாம். மாபெரும் பிழைகளைப் புகழொடு தோன்றச், செய்யும் எழுத்தாளர்கள் மக்களால் கௌரவிக்கப்பட வேண்டுமாம்.

●

பிழைகளைப் போற்றி வரவேற்று லிண்ட் எழுதியுள்ள கட்டுரையின் ஆங்கிலத்தலைப்பு: In praise of Mistakes. எழுத்தாளன் எவ்வளவு அரும்பாடுபட்டு ஒரு காவியமோ

கதையோ நாடகமோ படைத்தாலும் அவனுக்கு ஏற்படும் இன்பம் சிற்றின்பமே. அதேநேரத்தில் அவன் படைப்பில் ஒரே ஒரு பிழையைக் கண்டு பிடித்துவிட்டாலும் வாசகனுக்குக் கிடைக்கும் இன்பம் நிச்சயம் பேரின்பம் தான். அதனால் தான் லிண்ட் கட்டுரைத் தலைப்பைப் 'பிழைகள் தரும் பேரின்பம்' என்று தமிழாக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. (சமயச் சான்றோர்களிடமிருந்து பேரின்பத்தைத் தட்டிப் பறிக்கும் இந்தப் பாவிக்கு என்ன தண்டனை கிடைக்கப் போகிறதோ!)

ஒட்டக்கூத்தனின் தனிப்பாடல் ஒன்று. அந்தநாள் பூம்புகார்க் குடிகாரர்களின் கீர்த்தி குறித்த பாடல் அது. எவ்வளவுதான் குடித்திருந்தாலும் அவர்கள் புத்தி பேதலிக்கமாட்டார்களாம்; எதைக் கேட்டாலும், தெளிவாகச் சொல்வார்களாம். ஆனானப் பட்ட மகாபாரதக் கதையைக்கூட அச்சுப் பிசகாமல் சொல்வார்களாம். ஒருவன் 'மகாபாரதக் கதையைச் சொல்லவா' என்று கேட்கிறான். 'சரி சொல்' என்றால் உள்ளபடி சொல்லவா என்று கேட்கிறான். அரைப்படி ஒருபடி என்று 'உள்ளே ஊற்றியிருக்கும் அவன் ஆசையைக் கெடுப்பானேன்' என்று 'உள்ளபடி சொல்' என்றால் 'வாலி துரோபதையை மூக்கரிந்தது அல்லவா மகாபாரதம்' என்று முடிக்கிறான்.

இராமாயண மகாபாரதங்களுக்கிடையே என்னமாய்க் காப்பிய ஒருமைப்பாட்டை (Epic Integration) உண்டாக்க முயல்கிறான்.

'திருவாளன் உள்ளபடி'யின் உளறலில் துள்ளி விளையாடும் பிழைகளைத் தமிழர்கள் எவ்வளவு காலமாய் அனுபவித்திருக்கிறார்கள். 'சீதைக்கு ராமன் சித்தப்பா' என்று எவன் என்றைக்குச் சொன்னான் என்று தெரியவில்லை. யார் யாரெல்லாம் அதை நேரடியாகக் கேட்டுக் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள் என்றும்

தெரியவில்லை. சந்தேகமில்லாமல் அவர்கள் கொடுத்து வைத்தவர்கள்!

அப்படிப் பார்த்தால் ஆசிரியப் பெருமக்களும் கொடுத்து வைத்தவர்கள்தாம்!

குடும்பம் பிள்ளை குட்டி என்று அவர்களுக்கு ஆயிரம் கவலைகள் இருக்கலாம்; அவையெல்லாம் மாணவச் செல்வங்களின் விடைத் தாள்களைத் திருத்தத் தொடங்கினால், பஞ்சாய்ப் பறந்து ஓடிவிடும்.

டாக்டர் ஜி.யு. போப் வெளிநாட்டிலிருந்து வந்து தமிழுக்குத் தொண்டு செய்தவர். மரியாதை காரணமாக அவரை யாரோ 'போப் ஐயர்' என்று அழைத்ததை நினைத்து நினைத்து நெஞ்சம் உருகிய வேகத்திலோ என்னவோ 'ஐரோப்பாவிலிருந்து தமிழகம் வந்த டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்...' என்று எழுதுவார் ஒரு மாணவர். வட்ட அகராதி ஏதும் இருக்குமோ, என்னவோ, வீரமாமுனிவரின் சதுரகராதியை சதுர அகராதி என்று குறிப்பிடுவார் இன்னொருவர். நெடுஞ்செழியன் வீரத்துக்கு இது குறைந்தது என்று நினைத்தோ என்னவோ 'ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்' என்று எழுத வேண்டிய இடங்களில் எல்லாம் ஆசியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்று மறக்காமல் எழுதுவார் மற்றொருவர். இவர்களிடம் நெடுநல்வாடை, நெடுநாள்வாடை, நெடுநெல்வடை, நெடுநாள் வடை என்றெல்லாம் புதுப்புதுக்கோலம் பூண்டு நிற்கும்; குகப்படலம், குகைப் படலமாகும். மேருமலை மோருமலையாக மாறும் ... சங்கத்தோடு சம்பந்தப்பட்ட கபாடபுரம், தாராபுரம் ஆகும். முடத்திருமாறன் மூடத்திருமாறன் ஆவான்.

திண்ணையில் தனியாக உட்கார்ந்து ஆசிரியர் தேர்வுத் தாள்களைத் திருத்துவாரேயானால் மாணவமணிகளின் கைவண்ணத்தில் மனம் பறிகொடுத்துப் பட்டாசுச் சிரிப்புச்

சிரித்துவிடுவார். அப்புறம் வீதியில் போவோரெல்லாம் 'வாத்தியாருக்கு என்ன ஆயிற்று?' என்று கேட்டுப் பரிதாபப்படுவார்கள்.

முன்பு மதுரைப்பல்கலைக்கழகத்தில் ஒரே இடத்தில் ஆசிரியர்களைக் கூட்டி வைத்துத் தேர்வுத் தாள்களைத் திருத்தச் சொல்லும் வழக்கம் இருந்தது. அப்போது ஆசிரியர்கள் தங்களுக்குத் தனித்தனியே கிடைத்த பேரின்பத்தை மற்றவர்களோடு சமமாய்ப் பங்கிட்டுக் கொள்வார்கள். 'என் மாணவன் என்ன அழகாய் எழுதுகிறான் பாருங்கள்... கேவலன் மாதவி வீட்டில் தன் அஸ்தியைக் கரைத்தான்...' இப்படிச் சொன்னதும் அந்த மாணவரின் 'தனக்குவமையில்லாத தாளைப்' பார்க்க ஒவ்வொருவராக ஓடிவருவார்கள். பார்த்துவிட்டு விதவிதமாகச் சிரிப்பார்கள். திடீரென்று ஒருவர் அந்த மாணவரின் திருவாசகத்துக்கு நயம் சொல்வார். ''பையன் உணர்ச்சியுள்ளவன் ஐயா; மனைவி இருக்கும்போது இன்னொருத்தியைக் கோவலன் நாடிப்போனதை அவனால் சகிக்க முடியவில்லை. கேவலமான காரியத்தைச் செய்ததால் கேவலன் என்று அவன் பெயரை மாற்றி வைத்துவிட்டான் ஐயா... மன்னர் நெடுஞ்செழியன் கோவலன் தலையை வாங்கினான். நம் மாணவன் நெடுஞ்செழியன் தன் சக்திக்கேற்ப கோவலனின் காலை வாங்கியிருக்கிறான்'' என்று பாராட்டுவார். மண்டபமே சிரிப்பில் மூழ்கும்.

மதுரைப் பல்கலைக்கழக ஆட்சியாளர்களுக்கு ஏன்தான் இந்த வயிற்றெரிச்சலோ? ஆசிரியர்கள் கவலையில்லாத மனிதர்களாக, ஆனந்தமாகச் சிரித்து வாழக்கூடாது என்றுநினைத்து மையத் தேர்வுத்தாள் திருத்தப் பணியையே நீக்கி விட்டார்களே!

கோவலன் கால்போன கதையோடு தொடர்புடைய என் அனுபவம் ஒன்று நினைவுக்கு வருகிறது. என் பையன் சுடர் இரண்டாம் வகுப்புப் படிக்கும்போது சிலேட்டில் 'நெண்டி' என்று எழுதியிருந்தான். 'பொறுப்புள்ள அப்பா' என்று என் மனைவி என்னை மெச்ச வேண்டும் என்று பையனைப் பக்கத்தில் அமர்த்தி 'நெண்டி அல்ல ..... நொண்டி என்று எழுதவேண்டும். காலைக் காணோமே!' என்று கேட்டேன். உடனே அவன், ''நொண்டிக்கு எப்படி அப்பா கால் இருக்கும்'', என்று கேட்டான். ஒரு நிமிடம் நான் ஆச்சரியப்பட்டுப்போனேன். 'இந்தச் சின்ன வயதில் இவ்வளவு ஞானமா!' என்று அவனை உச்சிமோந்து முத்தமிட்டேன். பையன் அப்பனுக்கு உபதேசம் செய்த அந்தச் சாமிநாதனாகக் காட்சியளித்தான்.

என் இன்னொரு அனுபவம் ... இளமைக் கால அனுபவம். எட்டாம் வகுப்புப் படிக்கும்போது நடந்த சம்பவம். நாடகம் ஒன்றுக்குக் கதை வசனம் பாடல்கள் எழுதி ஒரு சிறு பாத்திரத்தில் நடித்து இயக்கவும் செய்தேன். (டி.ராஜேந்தர் மாதிரி எல்லாமே நான்தான்... தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் என்னைப் பயன்படுத்திக் கொள்வார்களாக.) நாடகத்தின் பெயர் தலையாலங் கானம். பாண்டியன் நெடுஞ்செழியனாகப் பன்னிரண்டு வயதுள்ள என் நண்பன் ஒருவன் நன்றாக நடித்தான். போருக்குப் புறப்படும் காட்சி. தாயிடம் வீர வசனம் பேசி விடை பெற வேண்டும் பாண்டியன். ஒத்திகையில் அந்த இளஞ்சிங்கம் ''பகைவர்களின் தலைகளைப் பந்தாடி விடுவேன். குடலை உருவி மாலையாகச் சூடி வருவேன். குருதியில் குளித்து வெற்றி கீதம் பாடி வருவேன். வடை கொடு, தாயே'' என்று முழங்கினான். சக மாணவ நடிகர்கள் எல்லாம் 'விடை கொடு தாயே' என்பதற்குப் பதிலாக 'வடை கொடு தாயே' என்று பேசியதைக் கேட்டுக்

கொல்லென்று சிரித்தார்கள். இயக்குநர் திலகமாகிய நானும் சிரித்தேன். பிறகு சிந்தித்தேன். வாய் தவறி வந்த வசனமே அரங்கேற்றத்திலும் இருந்தால் என்ன என்று யோசித்தேன். அதே மாதிரி ஆண்டு விழா நாடக மேடையில் பாண்டியன் 'வடை கொடு தாயே' என்று அமர்க்களமாகப் பேசினான். அவ்வளவுதான்... பள்ளிப் பிள்ளைகளும் பெற்றோர்களும் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். நாடகம் முடிந்ததும் பாண்டியனை யார் யாரோ வந்து ஆரத்தழுவினார்கள். வடை பாயசத்தோடு ஒரு விருந்தைச் சுவைத்தது போல் அனைவரையும் மகிழ வைத்த அந்த மாணவனைப் பாராட்டவில்லையென்றால் கலைத்தாய் கண்ணீர் வடிக்கமாட்டாளா?

பிழைபடப் பேசும் பாத்திரம் ஒன்றை உருவாக்குவது அவ்வளவு சாதாரணமான காரியமல்ல. ஷெரிடன் நாடகம் ஒன்றில் 'மலப்பிராப்' என்று ஒரு சீமாட்டி வருகிறார். 'இவர் என் காதலன்' என்று சொல்ல வேண்டியிருந்தால் 'இவன் என் காதகன்' என்று சொல்வார்.

I have two windows in my room என்பதை I have two widows in my room என்றானாம் ஒருவன். அந்தமாதிரி அந்த சீமாட்டி எதையும் மாற்றிப் பிழைபடப் பேசுவார். அந்தச் சீமாட்டி தம் நினைவாக 'மலப்பிராபிசம்' (MALAPROBISM) என்று ஒரு வார்த்தையை ஆங்கில அகராதிக்கு வழங்கியிருக்கிறார். காப்பிடலிசம், சோசலிசம், அண்ணாயிசம் போல அந்தச் சீமாட்டி செய்த பிழைகள் உலகத்துக்கு ஒரு புது இசத்தைத் தந்திருக்கிறதே... அவரைக் கோயில் கட்டிக் கும்பிடத்தான் வேண்டும்!


ஒருமுறை ஐன்ஸ்டினிடம் ''உங்களுடைய சார்பியல் கோட்பாட்டை (THEORY OF RELATIVITY) எளிமையாக

விளக்குங்களேன்'' என்று கேட்டாராம் ஒரு செய்தியாளர். ''ஒருவன் ஓர் அடுப்பின்மேல் உட்கார்ந்திருக்கிறான் என்று வைத்துக்கொள்; அவனுக்கு ஒரு நிமிடம் ஒரு யுகமாகத் தோன்றும். ஒருவன் தன் காதலியிடம் பேசிக் கொண்டிருக் கிறான் என்று வைத்துக் கொள். அவனுக்கு ஒரு நாள் ஒரு நிமிடமாகத் தோன்றும். சோதனைக்கு வேண்டுமானால் முன்னதை நீ செய்து பார். பின்னதை நான் செய்கிறேன்'' என்றாராம் சிரித்துக்கொண்டே. பிழைகளும் அப்படித் தான். ஒருவர் செய்து அதை இன்னொருவர் சுட்டிக் காட்டினால் அதில் உள்ள இன்பம் சாமான்யமானதல்ல. ஓர் அறிவியல் உண்மையைக் கண்டுபிடித்தபோது, குளியல் தொட்டியிலிருந்து நிர்வாணமாக 'யுரேகா' என்று கத்திக்கொண்டே ஆர்க்கிமிடீஸ் ஓடினாராமே, அப்போது அவருக்கு உண்டான இன்பத்துக்குச் சற்றும் குறைந்ததல்ல அது....

வெள்ளைத் தாமரையில் வெகுகாலமாய் வீற்றிருக்கும் கலைமகளே....! உனக்கொரு விண்ணப்பம்...

எதை எதையோ கலை என்று அறுபத்து நான்கு கலைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறாய்... எல்லோருக்கும் இலவசமாய்ப் பேரின்பம் வழங்கும் பிழை ஓர் உன்னத மான கலை... அதை அறுபத்தைந்தாவது கலையாக ஏற்றுக்கொள்...

❖



# தாழ்வுக்கு வந்த வாழ்வு

தமிழ்நாட்டில் இப்போது ஒரு 'ஸ்லோ சைக்கிள் ரேஸ்' நடக்கிறது, மிக வேகமாக.

பிற்பட்டோர் அல்லது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெறத் தான் இந்த ரேஸ்.

சாதிச்சங்கங்கள் எல்லாம் சுறுசுறுப்பாக இயங்குகின்றன அம்பா(ளின்) - சங்கரரின் அருட்பரிசு கிட்டாதா என்று!

வறுமையினாலும் மடமையினாலும் தாமாகக் கீழ்நிலை அடைந்தவர்களுக்காக - தாழ்வுற்றவர்களுக்காக அனுதாபப் படுகிறோம். மற்றவர்களால் காலங்காலமாய் அடிமைப்படுத்தப்பட்டுத் தாழ்த்தப்பட்டவர்களுக்காக - அல்லது பிற்படுத்தப்பட்டவர்களுக்காக - ஆத்திரப்படு கிறோம். இன்றோ சமூகத்தின் பல பிரிவினரும் 'எங்களைப் பிற்படுத்தப்பட்டோராக்கு - தாழ்த்தப்பட்டோராக்கு!',

என்று கோரிக்கைகள் எழுப்புவதைப் பார்க்கும்போது அதிசயப்படுகிறோம்...

தாழ்வுறுதலுக்கு இப்படியும் ஒரு போட்டியா .....?

தாழ்வுக்கு இப்படியும் ஒரு வாழ்வா....?

இன்னமும் இங்கே சாக்கடை அள்ளுபவர்கள், மலம் அள்ளுபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்த அருவருப்பான தொழில் முற்றாக ஒழிந்து விடவில்லை. பரம்பரை பரம்பரையாக அந்தத் தொழிலைச் செய்வோருக்கு அதிலிருந்து பூரண விடுதலை இல்லை. எங்களுக்கு அந்தத் தொழிலைச் செய்ய ஆசையாயிருக்கிறது' என்று வேறுயாரும் சொல்வதில்லை. முன் வருவதில்லை. சட்டம் அவர்களுக்குக் கொஞ்சம் சலுகைகள் கொடுத்தால் மட்டும் நமக்கும் அந்தச் சலுகைகளைக் கொடுக்கக் கூடாதா என்று ஏங்குகிறோம்... எதிர்பார்க்கிறோம்.

யானைப் பசிக்குப் பொரி உருண்டை மாதிரி வழி வழியாய் வந்த சமுதாய அநீதியை அகற்றக் கருதி நலிந்த பிரிவினருக்கு அரசு சில சலுகைகளை அளித்திருக்கிறது. பள்ளங்களை மண் இட்டு நிரப்பி உயர்த்த முயல்கிறது.

அரசு ஒன்று நினைக்க மக்கள் ஒன்று நினைக்கிறார்கள். 'எல்லா இடத்தையும் பள்ளமாக்குங்கள்!' என்கிறார்கள்... பள்ளத்தில் விழ நான் முந்தி நீ முந்தி என்று பலத்த போட்டி போடுகிறார்கள்!

முன்பெல்லாம் தங்கள் சாதிதான் உயர்வானது, மாற்றுக் குறையாதது என்று பெருமை பேசுவார்கள்; தாழ்ந்த சாதிக்காரர்கள் என்று மற்றவர்களால் மதிக்கப்படுபவர்களும் தங்கள் சாதியை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். மற்ற சாதிகளைக் காட்டிலும் தங்கள் சாதி மேலானது என்று நம்புவார்கள்.

கலம்பகப் பாட்டு ஒன்று இதனை - காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு என்பதனைச் - சுவையாகச் சித்தரிக்கிறது.

முருகனின் திருத்தலம் வெங்கையை ஆளும் வேடர் குலத்தலைவரின் மகள் ஒருத்தியை வேட்டையாட வந்த பாண்டியகுல இளவரசன் பார்க்கிறான். நெஞ்சம் பறி கொடுக்கிறான். அவளைத் திருமணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறான். ஊருக்கு வந்தவுடன் வேடர் குலத் தலைவனிடம் பெண் கேட்பதற்காக அமைச்சரைச் சீர்வரிசைகளுடன் அனுப்பி வைக்கிறான். தாழ்ந்த குலம் தானே, தராமலா போகப்போகிறான் என்ற தைரியத்துடன் அமைச்சர் வேடனைச் சந்திக்கிறார். ''பாண்டியன் வம்சம் சூரிய வம்சம்! சந்திரவம்சம்! வேடர் குலத்தைவிட எவ்வளவு உயர்ந்த வம்சம் அந்த வம்சத்தில் சம்பந்தம் செய்வதென்றால் வேடர் குலத்தலைவர் கொடுத்து வைத்திருக்கவேண்டும்'' என்று கூறி அவனுக்கு அடித்திருக்கும் யோகத்தைப் பாராட்டிவிட்டு மண ஓலையை நீட்டுகிறார்.

உடனே வேடர் குலத்தலைவனின் கண்கள் சிவக்கின்றன. ''ஓய் அமைச்சரே! எவ்வளவு துணிச்சல் இருந்தால் போயும் போயும் அரச வம்சத்தில் வந்த ஒருவனுக்குப் பெண்கேட்க வந்திருப்பீர்! சூரிய வம்சமாம்... சந்திர வம்சமாம்... என்னய்யா கதைக்கிறீர். தெரியாதா இவர்களுடைய யோக்கியதை? அரிச்சந்திரன் என்னய்யா செய்தான். வக்கில்லாமல் மனைவியை விற்றான். நளன் தமயந்தியைக் காரிருளில் கானகத்தில் கைவிட்டு ஓடினான். அப்பேர்ப்பட்ட இராமன் சீதையை அசோகவனச் சிறைக்கு அனுப்பிவைத்து விட்டு காட்டில் திரிந்து கொண்டிருந்தான். பாண்டவர்கள் தங்கள் நாயகி பாஞ்சாலியைத் துகில் உரிய விட்டுப் பார்த்துக்

கொண்டிருந்தார்கள்... இவ்வளவுக்குப் பிறகும் பெண் வேண்டும் என்று கேட்க அரசகுலத்தில் பிறந்த ஒருவனுக்கு யோக்கியதை இருக்கிறதா? எச்சரிக்கை, நீ இனிமேல் யாரிடமும் அரச குலத்தவனுக்குப் பெண் கேட்காதே. நாங்கள் யார் என்று நினைத்தாய்...வேடர்கள் ... திருவெங்கை வேடர்கள். எங்கள் கண்ணப்பனின் எச்சிலை யெல்லாம் நைவேத்தியம் என்று இன்பமாய்ச் சுவைத்தான் என்பதற்காகப் போனால் போகிறது என்று அந்தப் பரமசிவன் பெற்றெடுத்த குமரனுக்கு மட்டும் ஒரு பெண்ணைக் கொடுத்தோம். அதுவும் பெற்ற பெண்ணை அல்ல; வளர்த்த பெண்ணை''! என்கிறான். அரசகுலம் வேடர் குலத்தைவிட எந்த எந்த வகையில் மேலானது என்று கேட்டு அரசு சலுகையை - சம்பந்தத்தை - ஏற்க மறுக்கிறான்; வீரம் பேசுகிறான்!

இதே போல் ஒரு சம்பவம் ... என் கல்லூரி வாழ்வில் கண்டது. பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவர் சம்பளச் சலுகைபெறக் கல்லூரியில் விண்ணப்பம் கொடுத்திருந்தார். கையெழுத்துப் போட்டது தவிர அந்த மாணவரின் தந்தைக்கு வேறு எதுவும் தெரியாது. வருடக் கடைசியில் 'ஸ்காலர்ஷிப்' பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அவருக்குக் கடிதம் போனது. அவர் வந்தார். அவர் மகனின் வகுப்பு நண்பர்களாகிய எங்களிடம் விவரம் கேட்டார். ''நீங்கள் பிற்பட்ட வகுப்பு, அதனால் அரசாங்கம் நீங்கள் கட்டிய சம்பளப் பணத்தைத் திருப்பித் தந்திருக்கிறது'' என்று சொன்ன அடுத்த வினாடியில் அவருக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே... நெற்றிக் கண் இருந்திருந்தால் நிச்சயம் திறந்திருப்பார்... ''நான் என்ன சின்னச் சாதியா? எங்கள் பரம்பரை எப்பேர்ப்பட்டது தெரியுமா;'' என்று பெருமைப்புராணம் பாட ஆரம்பித்து விட்டார். அவரைச்

சமாதானப்படுத்தி விளக்கம் கூறி விளங்க வைத்து 'வந்ததை வரவில் வையுங்கள்' என்று ஸ்காலர்ஷிப் பணத்தை வாங்க வைப்பதற்குள் மாணவர்களாகிய எங்களுக்குப் போதும் போதும் என்றாகி விட்டது.

இந்த நவயுகத்தில் குலப்பெருமை, குடிப்பெருமை பற்றி யெல்லாம் யாருக்கும் கவலையில்லை.

அந்தணர் குலமோ அரசகுலமோ எதுவானாலும் சலுகை கிடைத்தால்போதும். பிற்பட்டோர் பட்டியலிலோ அல்லது தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலோ எதிலும் இடம் பெறத் தயார்.

பெரும்பாலும் சோற்றுக்காக மதம் மாறியவர்கள் தானே நம்மவர்கள்... இப்போது சலுகைகளுக்காக பிற்பட்டோர் ஆகவும் தயார்!

கணவன் மனைவிக்கிடையே பிணக்கு அல்லது ஊடல் ஏற்பட்டால், அதில் முதலில் யார் சரணடைகிறாரோ அல்லது தோற்கிறாரோ அவர் தான் வெற்றி பெற்றவராம். அதுபோல் தங்கள் இனத்தவரை பின்தங்கியவர் ஆக்கிவிட்டால் அவர்கள் முன்னேறி விடுவார்கள் என்று நினைக்கிறார்கள் சாதித் தலைவர்கள்.

74 சதவீதம் பெரும்பான்மை இருந்தும் சிங்களவர்களிடம் சிறுபான்மைக்குரிய தாழ்வு மனப்பான்மை இருக்கிறது என்று சொல்வார்கள். அதே போல் பெரும் எண்ணிக்கை உள்ள சமூகப் பிரிவினரிடம் ஒரு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்த நம் சாதித் தலைவர்கள் படாதபாடு படுகிறார்கள். உள்ளுக்குள் தங்களுக்கு ஏதாவது பதவி கிடைக்கவேண்டும் என்ற எண்ணம் ஓங்கியிருக்கும். அதை வெளிக்காட்டாமல் தங்கள் சமூகத்தாருக்கு அரசாங்க உதவி கிடைக்க வேண்டும், சலுகை கிடைக்கவேண்டும் என்று

முழங்குவார்கள், ஊர்வலம் நடத்துவார்கள்; மாநாடு கூட்டுவார்கள்; மற்ற சாதிக்காரனைப் பாருங்கள் என்ற உதாரணம் காட்டுவார்கள்.

ஒரு சாதித் தலைவரைச் சந்தித்து உங்கள் சாதியில் எத்தனை ஏழைப் பையன்களுக்கு படிக்க உதவியிருக் கிறீர்கள் ... எத்தனை ஏழைப்பெண்களுக்கு வரதட்சணை கொடுக்காமல் திருமணம் செய்ய உதவியிருக்கிறீர்கள் என்று கேட்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்! என்ன பதில் வரும்....? ''முதலில் எங்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கச் சொல்லுங்கள்; அதற்குப் பிறகு பாருங்கள்'' என்பார்கள். முன்னுக்கு வருவதற்கு அவர்கள் கண்டுபிடித்துள்ள ஒரே வழி பின்னுக்கு வருவது!

கலைவாணர் என்.எஸ்.கே. ஒருமுறை குதிரை வண்டிக்காரர்கள் மாநாட்டில் பேசும்போது ''உங்கள் மீதுதான் எனக்கு அதிக மரியாதை! நீங்கள் தான் யாரையும் முன்னுக்கு வாங்க! முன்னுக்கு வாங்க என்று சொல்லுகிறீர்கள்'' என்று குறிப்பிட்டார். இப்போது ஒவ்வொரு சாதித் தலைவரும் பின்னுக்கு வாங்க! பின்னுக்கு வாங்க! என்கிறார்கள். பின்னுக்கு வந்தால் தான் அவர்கள் முன்னுக்கு வரமுடியுமாம். பதுங்கினால் தான் பாய முடியுமாம்!


''தமிழ்நாட்டில் என்றுமில்லாத அளவுக்கு இப்போது சாதிவெறி தலை தூக்கியிருக்கிறது. ஒவ்வொரு சாதியிலும் வலுத்தவர்கள் வாழ்கிறார்கள். எந்த ஒரு கோரிக்கைக்குப் பின்னாலும் ஒரு சுயநலக் கும்பலின் நலன் ஒளிந்து கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாதவரை ஏழைகள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டே இருப்பார்கள் என்று என் நண்பர் ஒருவர் கவலைப் பட்டார்... அவர் கவலை நியாயமானதே...

உண்மையில் ஏழை பணக்காரர் என்று சாதிகள் இரண்டே இரண்டுதான்... ஏற்றத்தாழ்வு ஒழிந்து எல்லோரும் ஒரே மனித சாதி ஆகும்வரை சலுகைகள் பெற வேண்டியவர்கள் ஏழைகள் மட்டுமே... இதை எத்தனை பேர் எண்ணிப் பார்க்கிறார்கள்...

இன்றுள்ள சூழ்நிலையில் ராஜரிஷி விசுவாமித்திரர் கூட பிரம்மரிஷியாக வேண்டும் என்று கவலைப்பட மாட்டார்... பிற்பட்டோர் பட்டியலில் தம் இனத்தவர் இடம்பெற்றால் போதும் என்று நினைத்தாலும் நினைப்பார்... இங்கே நடக்கும் ஸ்லோ சைக்கிள் ரேஸில் பங்கு கொள்ள முன்னால் நின்றாலும் நிற்பார்!

❖

*30-11-83.*



# ஏன்டா ரங்கா இலங்கைக்கு எப்படித் தாண்டுவே..

சினிமா நடிகைகளுக்குத்தான் ரசிகர்களா?

இதோ சிறுவர்கள் புடை சூழ ஓர் ஆதிமனிதனின் வாரிசு வாலாட்டியவாறு வாசலில் வந்து நிற்கிறது.

இதோ எசமானன் அதை ஆட்டுவிக்கிறான்.

''ரங்கா, ஐயாகிட்டே செஞ்சி காட்டுடா... காசு கொடுப்பாரு...... இங்கேருந்து லங்கைக்கு எப்படித் தாண்டுவே...?'' - இப்படிச் சொல்லிவிட்டுக் கற்கள் உள்ள தகர டப்பாவை நாலு குலுக்குக் குலுக்கிச் சவுக்குக் குச்சியால் தரையில் ஒரு தட்டுத் தட்டுகிறான் -

குரங்கு ஒரு அரைவட்டம் போட்டு 'பல்டி' அடித்துக் காட்டுகிறது.

'ஒருவேளை தங்களோடு மகாத்மாவின் கொள்கை களையும் கொலுவில் வைத்துவிட்ட கொடுமையை நினைத்துக் கோபத்தில் வெளி நடப்புச் செய்து விட்டனவோ...

இருக்கலாம்... மகாத்மாவின் கொள்கைகளைப் பற்றி இப்போதெல்லாம் யார் அதிகம் க்வலைப்படுகிறார்கள்...?

பெண்ணைத் தொடும்போது கூடக் காகிதத்தைத் தொடும் உணர்வே இருக்கவேண்டும் என்றார் அவர். இன்றோ ஜெயராஜ் படம் உள்ள காகிதத்தைத் தொடும் போதுகூட பெண்ணைத் தொடுவதாகவல்லவா மயங்கு கிறார்கள் நம்மவர்கள்!

சே... குரங்கை விட்டுவிட்டு எங்கோ தாவுகிறேனே...

மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்பது டார்வின் சித்தாந்தம்... இதை அறிவியல் மேதைகள் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் குரங்குகள் ஒப்புக்கொள்ளுமா என்பது சந்தேகம்.

குரங்குகள் மாநாடு போட்டால் டார்வின் கோட்பாடு தவிடு பொடியாகலாம். ''எந்தக் குரங்கும் வரதட்சணை கொடுக்கவில்லை என்று மனைவியை அக்கினிப் பிரவேசம் செய்யவைப்பதில்லை எந்தக் குரங்கும் சீட்டாடுவதில்லை; எந்த குரங்கும் மத்தியானம் ஒரு மணி வெயிலில் சினிமா பார்க்கத் தவிப்பதில்லை. எந்தக் குரங்கும் கலப்படம் செய்வதில்லை. கரன்ஸி நோட்டுகளை சேர்த்துவைத்து எண்ணி மகிழ்வதில்லை. எந்தக் குரங்கும் மதவெறியையோ இனவெறியையோ தூண்டுவதில்லை. ஆகவே மனிதன் நம்மிலிருந்து உண்டாகவில்லை. டார்வின் சொன்னது தவறு என்று கண்டனத் தீர்மானம் போட்டாலும் போடலாம்.

எதையும் பிய்த்தெறிவது, பிரிப்பது, அடிக்கடி தாவுவது, மற்றவர் பொருளை அசந்த நேரம் பார்த்துக் கவர்வது- இவையெல்லாம் குரங்குகளின் பிறவிக்குணம் என்கிறார்கள். என்னால் அதை ஒப்புக்கொள்ள முடிய வில்லை. சாதி சமயத்தைச் சொல்லி மக்களைப் பிரிப்பது, பதவிக்காகக் கட்சிவிட்டுக் கட்சி தாவுவது, பணத்தைக் காட்டி மக்களை ஏமாற்றி வாக்குச் சீட்டுகளைக் கவர்வது இவை நம் அரசியல்வாதிகளுக்கேயுரிய 'கருவிலே திருவுடைய' குணங்கள். ஆதிகாலத்தில் யாரோ ஓர் அரசியல்வாதிதான் குரங்குகளுக்குத் தன் இனத்தின் குணங்களைக் கற்றுக் கொடுத்திருக்க வேண்டும்.

குரங்கிடமிருந்துதான் அரசியல்வாதி இந்த குணங்களைப் பெற்றிருக்கவேண்டும் என்று சிலர் மறுக்கலாம். எப்படியோ, மனிதனுக்கும் குரங்குக்கு மிடையே இந்த கொடுக்கல் வாங்கல் நீண்ட காலமாகவே இருந்து வருகிறது.

'கல்தோன்றி மண் தோன்றாக்காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி' என்று தமிழ்க்குடியின் பழம்பெருமை குறித்து ஒரு புலவர் பாடினார். அந்தப் பாட்டில் 'வாளொடு' என்பதற்குப் பதிலாக 'வாலொடு' என்று இருப்பதே பொருத்தம் என்று ஒரு கூட்டத்தில் ஒரு பேராசிரியர் வேடிக்கையாகக் குறிப்பிட்டார். மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்ற கருத்தை நிலைநாட்ட வசதியாக உதவும் இந்த ''வால்'', பாட்டு டார்வினுக்குத் தெரியாமல் போனது நம் துரதிர்ஷ்டமே.... டார்வினுக்குத் தெரிந்திருந்தால் புதுமைப் பித்தன் கேலியாகச் சொன்னாரே 'முதற்குரங்கே தமிழ்க் குரங்கு' என்று அதை நிரூபித்துக் காட்டியிருப்பார்.

வால்தான் குரங்குகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதம். இராமனின் தூதுவன் என்பதால் வேண்டுமென்றே

அவமானப்படுத்தக் கருதிய இராவணன் அனுமனுக்கு ஆசனம் கொடுக்கவில்லை. அதற்காக அனுமன் கவலைப்படவில்லை. தன் நீண்ட வாலை ஒரு சுற்றுச்சுற்றி உயர்த்தி இராவணனின் அரியாசனத்துக்கு இணையாகச் சரியாசனம் போட்டு உட்கார்ந்து கொண்டான்.

நமக்கும் வால் இருந்தால் எவ்வளவு வசதியாக இருக்கும்! வீட்டில் இடத்தை அடைத்துக் கொண்டிருக்கும் நாற்காலி பெஞ்சுகளைத் தூக்கி எறிந்து விடலாமே! ரயில்நிலையம், பேருந்து நிலையம் போன்ற பொது இடங்களில் வாலைச்சுருட்டி ஆசனமாக்கி அமர்ந்து கொள்ளலாமே, கவலையில்லாமல்... நாம் 'வாலுக்குப் போவதெங்கே...?'

தேசத்துக் குரங்குகளைப் பற்றி அளக்கிற வேகத்தில் எங்கள் தெருவுக்கு வந்த வி.ஐ.பி. களை மறந்து விட்டேனே!

தெருமுனையில் உள்ள அரசமரம்தான் அவைகளின் வாசஸ்தலம். அரசமர இலைகள் பொன் நிறமாய் அசைகின்றன என்றால் அந்தக் குரங்குகள் மூன்றும் கிளைக்குக் கிளை ஊஞ்சல் ஆடுகின்றன என்று அர்த்தம். பொழுது விடிந்ததும் மூன்று தெருவில் ஒரு முனையிலிருந்து மறு முனைவரை போர் வீரர்களைப் போல் வரிசையாய் நான்கு காலில் நடந்து திரும்பும்; பிறகு ஒவ்வொரு வீட்டுச்சுவராக ஏறும். பகைவர்களின் கோட்டைகளில் ஏறுவதைப் போல் ஒரு எண்ணம்... சேர சோழ பாண்டியர்களைப் போல் ஒரு கம்பீரம்...

என் வீட்டுக் கொல்லையில் உள்ள கொய்யா மரத்தின் உச்சிவரை ஏறி எங்களால் கொய்ய முடியாத காய்களை யெல்லாம் பறித்துச் சுவைத்துக் 'காயிலே இனிப்பதென்ன' என்று பாடாமல் பாடுகின்றன. பாதி கடித்து மீதியைக் கீழே

போடுகின்றன. முன்பெல்லாம் எறும்பு கடித்தது, அணில் கடித்தது என்று சொல்லும் வேலைக்காரச் சிறுமி ராஜம் இப்போது குரங்கு கடித்தது என்று கையில் வைத்திருக்கும் காயைக் காட்டுகிறாள். இதே போல் ஒவ்வொரு வீட்டுக் கொல்லையிலும் தேங்காய், பப்பாளி, தக்காளி என்று ஏதாவது விருந்து கிடைக்கிறது. இப்படி எப்போதும் சத்துணவு கிடைத்துவிடுவதால் இந்தக் குரங்குகள் அரச மரத்துப் பக்கத்தில் உள்ள சத்துணவு மையத்தை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

வர வர குரங்குகளின் வாலாட்டம் அதிகமாகி விட்டது.

உள்ளூரில் ஒரு கூட்டத்தில் பேசியதற்காக ஒரு ரோஜாப்பூ மாலை கிடைத்தது. மேடையில் ஒன்றிரண்டு பூவைச் சுவைத்த நேர்த்தியைப் பார்த்தோ என்னவோ செயலாளர் மாலையை வீட்டுக்குக் கொண்டு வந்து கொடுத்தார். நானும் அவருக்கு முன்னாலேயே நாகரிகமாக மாலையைப் பாரதி படத்துக்கு மாட்டி வைத்தேன். மறுநாள் காலையில் காய்ந்த மாலை குரங்கின் கையில் இருந்தது. இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன்.

குழாயைப் போட்டுத் தொட்டியில் தண்ணீர் நிரப்பி வைத்ததும் மூன்றும் எங்கிருந்து தான் வருமோ, ஜலக்கிரீடை செய்துவிட்டு ஓடிவிடும். துவைத்த சேலையைக் கம்பியில் காயப்போட்டால் போதும், துச்சாதனன் மாதிரி வந்து நிற்கும். அடுத்த வீட்டுச் சோற்றுப்பானை, பக்கத்து வீட்டுப் பால் செம்பு இப்படிப் பல பொருட்கள் என் வீட்டு மாடியில் குலுக்கலில் விழாத லாட்டரிச் சீட்டுகளாய்ச் சிதறிக்கிடக்கும். இந்தக் குரங்குகளின் அட்டகாசத்தை யாரும் அடக்குவதாகத் தெரியவில்லையே என்று பக்கத்து வீட்டு மாமி ஒரு

பாட்டுப் பாடி முடிப்பது இப்போது வாடிக்கையாகி விட்டது. என்னசெய்வது? எப்படி விரட்டுவது என்று எங்களுக்குத் தெரியவில்லை. கம்பெடுத்து நீட்டினால் எதிர்த்து 'உர்' என்று முகத்தைக் காட்டுகின்றன. கல் எடுத்து எறிந்தால் யார் மேலாவது பட்டு 'எந்தக் குரங்கு எறிந்தது' என்று யாராவது திட்டித் தீர்க்கப் போகிறார்களே என்று பயமாய் வேறு இருக்கிறது.

ஏதாவது செய்தாக வேண்டும் என்று தீர்மானித்து எங்கள் தெருவில் உள்ள அனைவரும் கடைசி வீட்டுக்குப் புதிதாய்க் குடிவந்துள்ள காவல்துறை அதிகாரியிடம் சென்றோம். ''குரங்குகளின் ஏகாதிபத்தியம்'' குறித்து முறையிட்டோம். அவரிடம் துப்பாக்கி இருக்கிறது என்பதைச் சமர்த்தாக ஞாபகப்படுத்தினார் ஒருவர். 'அவரோ எங்கள் துப்பாக்கிக்குக் குரங்கைச் சுட்டுப்பழக்க மில்லை' என்று ஒரே வரியில் சொல்லிவிட்டார்.

வேண்டுமானால் தாசில்தாரைப் பாருங்கள் என்றார். தாசில்தாரிடம் சென்றோம், மகஜர் கொடுத்தோம். 'குரங்குகள் வந்து விட்டன என்றால் உங்கள் ஊர் குற்றாலம் ஆகிவிட்டது என்று நீங்கள் சந்தோஷப்படவேண்டும். நான் குற்றாலத்தில் இருந்தேன். எவ்வளவு மரங்கள்.... எவ்வளவு குரங்குகள்... நான் அங்கிருந்து தான் டிரான்ஸ்பர் ஆகி வருகிறேன்' என்றார். குறும்புக்கார இளைஞன் ஒருவன் கூடவே 'பந்துக்களையும் கூட்டி வந்துவிட்டார் போலிருக்கிறது' என்று மெல்லக் கிசுகிசுத்தான்.

''ஸார், நீங்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்கவில்லை யென்றால் நாங்கள் 'குரங்குகளே வெளியேறு' என்று கோஷம்போட வேண்டியதிருக்கும். ஊர்வலம், உண்ணா விரதம் நடத்த வேண்டியதிருக்கும். அந்த மூன்று குரங்குகளும் சொகுசாகக் குடியிருக்கும் அரச மரத்தைச்

சுற்றிச் சுற்றி வந்து ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டிய திருக்கும்'' என்று கொஞ்சம் கோபமாகச் சொன்னோம். அவர் எங்களைச் சமாதானப்படுத்தி 'எதற்கும் நீங்கள் நகராட்சி ஆணையாளரைப் பாருங்கள்' என்றார்.

அவரிடமும் போனோம்: புகார் மனுவை வாசித்தோம். சேலம் பக்கத்தில் ஏதோ ஒரு ஊரில் ஒரு குரங்கு மனிதனைக் கடித்துக் கொன்ற கொடுமையையெல்லாம் புட்டுப்புட்டு வைத்து உடனடியாக இந்தக் குரங்குகளைப் பிடித்துக் குற்றாலத்துக்கோ, அழகர்கோயிலுக்கோ அனுப்பக் கோரினோம், அவர் சிரித்துக் கொண்டே ''எங்களுக்கு நாய்களை அடிக்க மட்டும்தான் அதிகாரம் இருக்கிறது. குரங்குகளை அடிக்கவோ பிடிக்கவோ எந்த அதிகாரமும் இல்லை. கொஞ்சம் பொறுங்கள்... நகராட்சித் தேர்தல் வரட்டும், கவுன்சிலில் வைத்து நல்ல முடிவு எடுப்போம்'' என்றார்.

அவ்வளவுதான், எங்களோடு வந்த கட்சிக்காரர் ஒருவர் ''இந்தத் தடவை எங்கள் கட்சி எல்லா வட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தும். குரங்கை வைத்தே குரங்கைப் பிடிப்போம். முதலில் குரங்குச் சின்னத்தில் போட்டியிட்டு நகராட்சியைப் பிடிப்போம். பிறகு அந்த மூன்று குரங்குகளையும் பிடிப்போம்'' என்று ஆவேசமாகச் சொன்னார்.

நாங்கள் எல்லோரும் வானத்தைப் பார்த்தோம்.

❖

*7-12-83*



# கருப்பொருள் கடைப்பொருளாகிறது

கவிதை ஒரு தொழிலாய், வணிகமாய் மாறிவருகிறது என்று நான் எழுதிய கட்டுரையைப் படித்துவிட்டு நண்பர் ஒருவர், 'கவிதையின் கருப்பொருள் மட்டுமா, மனிதனின் கருப்பொருள் கூட இனி மேல் கடைப்பொருள் ஆகிவிடும் போல் இருக்கிறது.... காலம் எப்படியெல்லாம் போய்க்கொண்டிருக்கிறது பார்த்தீர்களா' என்று சொல்லித் தம் கையில் வைத்திருந்த - ஆங்கில தினசரியிலிருந்து வெட்டி எடுத்த - ஒரு கட்டுரையைக் கொடுத்தார்.

மனித உயிர் தாயின் கருப்பையில் கருவாய் இருந்து குழந்தை உருவாய் வெளிவருமுன் பலநிலைகளைப் பெறுகிறது; கருவளர்ச்சி பெற்று முதிர்ச்சியுற்றுப் பிண்டம் (Foetus) என்றும் பெயர் பெறுகிறது.

இந்த மனிதப் பிண்டங்களை வைத்து நடத்தும் நர வியாபாரத்தை -அறிவியல் சோதனையின் பெயரில் மேலைநாடுகளில் நடைபெறும் அப்பட்டமான சுரண்டல்களை - திருமதி தாரா அலி பெய்க் அம்பலப் படுத்தியுள்ளார், அந்தக் கட்டுரையில்.

பெருகிவரும் மக்கள் தொகையை கட்டுப்படுத்தும் கருத்தின் அடிப்படையில் இப்போதெல்லாம் கருப்பாதை சாத்துவதையோ, கருவைக் கலைப்பதையோ குற்றமாகக் கருதாமல் அனுமதிக் கிறோம். ஆனால் கருப்பொருள் கடைப்பொருள் ஆவதையோ, பிண்டம் பேரம் பேசும் பண்டம் ஆவதையோ எப்படி அனுமதிக்க முடியும்? ஏற்கமுடியும்?

அனுமதிக்க முடியாத இந்தக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த ஓர் அனைத்துலக சங்கமே உருவாகியிருக்கிறது; மிக நீண்ட பெயருள்ள இச்சங்கம் பாரிசில் நடந்த ஒரு கருத்தரங்கில் பல திடுக்கிடும் செய்திகளை உலகின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது; கருச்சிதைவை வியாபார மயமாக்கும் கயமைக்கு எதிராகக் கடுமையான கண்டனங்களை எழுப்பியுள்ளது.

சென்ற ஆண்டில் நடந்த சம்பவம்.... ஸ்விஸ் - பிரான்ஸ் எல்லையில் சுங்க அதிகாரிகள் ஒரு சிலர் சோதனையிடு வதற்காக ஒரு லாரியைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். உள்ளே பார்த்தால் லாரி நிறைய மனிதப்பிண்டங்கள். நம் ஊரில் அரிசி கடத்துவதுபோல் பிண்டங்களைக் கடத்தியிருக்கிறார்கள் லாரியில். அவை எதற்காகக் கடத்தப்பட்டன என்று விசாரித்தபோது, 'அழகு சாதனம்' தயாரிக்கும் ஒரு பிரெஞ்சு நிறுவனத்திற்காக என்ற உண்மை வெளிவந்தது. பிண்டங்களின் தோல் மிகமிக மென்மையாய் இருக்கும் என்பதால் அவற்றைப்

பதப்படுத்தி, பக்குவப்படுத்தி விலையுயர்ந்த தோல் பொருள்களைத் தயாரிக்கிறார்களாம்.

கொழும்பு நகரில் அண்மையில் நடந்த இனப்படு கொலையின்போது சாலையில் ஒரு திருப்பத்தில் ஒரு குவியல் தென்பட்டதாகவும் அது தமிழ்க் கர்ப்பிணிப் பெண்களின் வயிற்றைக் குத்திக் கிழித்து எடுத்துப் போட்ட பிண்டங்களின் குவியல் என்று பக்கத்தில் நெருங்கிப் பார்த்தபோது தெரிந்ததாகவும் ஒரு பெண் பத்திரிகையாளர் குறிப்பிட்டிருந்தார். கோர இனவெறிக் கூத்திலும் அரக்க உள்ளம் படைத்த சில வியாபாரிகள் ஏற்றுமதிக்கு ஏதாவது கிடைக்குமா என்று அலைந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இந்த ஏற்றுமதித் தொழில் சிறந்து விளங்க ஒரு சில நாடுகளின் பெண்கள் மனமுவந்து 'அழிவுப்பூர்வமான' உதவிகளைச் செய்கிறார்களாம். கணிசமான அளவு பணம் பெறலாம் என்ற பேராசையில் கருச்சிதைவு செய்து கொள்ள முன்வருகிறார்களாம். அரசாங்கம் அனுமதிக்கும் கருச்சிதைவுச் சட்டத்தின் சலுகைகளை எப்படி யெல்லாமோ பயன்படுத்துகிறார்களாம். கருவை வேண்டுமளவு வளரச்செய்து எந்தப் பக்குவ நிலையில் கேட்கிறார்களோ அந்தப் பக்குவ நிலைக்கு வந்தபின் கருச்சிதைவு செய்து தருகிறார்களாம்.

இந்தப் பின்னணியில் ஒரு சுவையான வரலாற்றுச் செய்தியைச் சொல்லியாக வேண்டும்... கோச்செங்கணான் என்ற சோழ அரசனின் பிறப்புப்பற்றிய வியப்பான செய்தி அது. சுபதேவன் என்ற சோழமன்னனுக்கும் கமலவதி என்ற அரசிக்கும் பிறந்தவன் இந்தக் கோச்செங்கணான் என்பார்கள். கமலவதி பிரசவிக்க இருந்த நேரம்... அப்போது அரண்மனைச் சோதிடர் ஒருவர் 'இந்தக்

குழந்தை ஒரு நாழிகை கழித்துப் பிறந்தால் அகில முழுதும் கட்டி ஆள்வான்' என்றாராம். இதைக் கேட்ட கமலவதி பல்லைக்கடித்துக் கொண்டு கால்களைக் கட்டிலில் தூக்கி வைத்துக்கொண்டு அடக்கியிருந்தாளாம். ஒரு நாழிகை கழித்துப் பிள்ளை பெற்றாளாம். வயிற்றில் கூடக் கொஞ்சநேரம் இருந்ததால் சிவந்த கண்களை உடையதாய்ப் பிறந்த குழந்தையைப் பார்த்து 'என்கோ, செங்கண்ணனோ' என்று கூறிக்கொண்டே உயிர் விட்டாளாம்.

இது முடியுமா, முடியாதா என்று மருத்துவர்கள்தான் கருத்துக் கூறமுடியும். அவள் உடனே இறந்து விட்டதாகச் சொல்வதால் ஒருவேளை நடந்திருக்கவும் கூடும். அது நடந்திருக்குமோ என்னவோ அதையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டு ஏப்பம் விடுகிற காரியத்தைத் தென் கொரியா நாட்டுத் தாய்மார்கள் சிலர் செய்திருக்கிறார்கள்.

பொதுவாக 12 வாரம் வரைதான் ஆபத்து அதிகமில்லாமல் கருச்சிதைவு செய்துகொள்ளக் கூடிய காலம்... ஆனால் பொருளுக்கு ஆசைப்பட்டு, 20, 21 வாரங்கள் வளர்ந்த நிலையில் கருவைச் சிதைப்பது உயிரைக் குடிக்கும் செயல்

இது தெரிந்தும் வேண்டியபோது பிள்ளையைப் பெற்று விட்டுப்போன சோழ அரசி போல வேண்டியபோது பிண்டத்தைக் கொடுக்க கொரியப் பெண்கள் சிலர் தங்களைக் கெடுத்துக் கொள்கிறார்கள்! ஆமாம்..... உயிருக்குக் கேடு தேடிக் கொள்கிறார்கள்!

அமெரிக்காவில் உள்ள இராணுவ சோதனைச்சாலைக்கு அதன் நிர்வாகம் கேட்கும் பக்குவத்தில் கருச்சிதைவு செய்துகொடுக்க கொரியாத் தாய்மார்கள் சிலர் ஒப்புக் கொள்கிறார்கள் என்ற அதிர்ச்சி தரும் செய்தியை ஒரு

புகழ்பெற்ற பிரெஞ்சு நாளேடு (Le Monde) வெளியிட்டுள்ளது.

ஏகாதிபத்தியம் கருவிலே கூடத் தன் திருவிளையாடலை நடத்துகிறது என்று குறிப்பாய் உணர்த்தியுள்ளது.

●

உடற்கூறு சம்பந்தப்பட்டவற்றை அறிவதற்கு குரங்கு, தவளை போன்ற விலங்கினங்களை அறுத்துக் கூறு போடும்போது மனிதன் மட்டும் விதிவிலக்கா? இன்சுலின் தயாரிக்கவோ, மருத்துவ ஆய்வுக்காகவோ சிசேரியன் முறையில் வயிற்றைக் கீறிக் கூறுபோட்டால்-கருவில் கத்தி வைத்தால் அதையும் ஒட்டு மொத்தமாக எதிர்க்கலாமா என்று விஞ்ஞான மனோபாவம் கொண்டவர்கள் கேட்கக்கூடும்.

மனிதர்கள் தங்கள் இரத்தத்தையே இரத்த வங்கிகளுக்கு விற்கிறார்கள். ஏன், சிறுநீரகங்களைக் கூட விற்பனைக்குத் தயார் வாங்குவார் உண்டோ என்று விளம்பரம் செய்கிறார்கள். இப்படி இன்னொரு உயிரை வாழ வைப்பதற்காக நம் உடலின் ஒவ்வோர் உறுப்பும் பயன்படலாம்.

ஆடவனின் ஓர் எலும்பை எடுத்துத்தானே ஆண்டவன் பெண்ணைப் படைத்தான் என்று பெருமை பேசும் நாம், மனித உடலின் எந்த உறுப்பும் அறிவியலுக்குப் பயன்படுவதைப்பற்றி மெத்தவும் மகிழலாம்.

அறிவியல் முன்னேற்றத்திற்காக, மக்கள் நல்வாழ்வுக்காக என்றால் நாம் இவ்வளவுதூரம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை... பணம் கிடைக்கிறதா, பிணம் என்றாலும் அறுத்துக்கூறுபோடத் தயார் என்று

உலகெங்கிலும் ஒரு கூட்டம் காத்திருக்கும்போது மனிதாபிமானின் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்க முடியுமா?

பிறப்பதற்கு முன்னும் பிறந்த பின்னும் பாதுகாப்புத் தரப்படவேண்டும் என்பது ஐ.நா.வின் குழந்தை நல மேம்பாட்டுக் குறிக்கோள். அந்தக் குறிக்கோளைச் சிதைக்கும் கொலை பாதகங்களை நாம் கண்ணை மூடிக்கொண்டு அனுமதிக்க முடியுமா?

அண்டபிண்ட சராசரங்களுக்கும் ஆண்டவன் படியளக்கிறான் என்பார்கள். அவன் அளக்கிறானோ இல்லையோ, அதற்காகப் பிண்டம் படியளக்கும் சிறுமையின் நிழல் மனித குலத்தின் இதயத்தில் படிவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

❖

21-12-83



# பெயரில் என்ன இருக்கிறது?

பெயரில் என்ன இருக்கிறது? ரோஜாவை என்ன பெயர் சொல்லி அழைத்தால் என்ன; ரோஜா ரோஜா தான் என்றார் சேக்ஸ்பியர்.

அவர் மாண்புமிகு கவியரசராக இருக்கலாம். மகாகனம் பொருந்திய நாடக சக்கரவர்த்தியாக இருக்கலாம். அதற்காக அவர் சொல்வதற்கெல்லாம் ஆமாம் போட முடியுமா, நம்மால்? பெயரில் என்ன இருக்கிறதா? எவ்வளவோ இருக்கிறது.

இல்லாமலா பிறக்குமுன்பே கணவனும் மனைவியும் பிள்ளைக்கு 'என்ன பேரு வைக்கலாம் எப்படி அழைக்கலாம்' என்று முதல் இரவிலேயே ஒரு கருத்தரங்கம் நடத்துகிறார்கள்; தங்கள் கற்பனை வளத்தைச் சோதித்துப் பார்க்கிறார்கள்.

மூளைக்கு வேலை வைப்பானேன் என்று நினைக்கும் சிலர் பிள்ளைக்குக் குலசாமி பெயரை வைப்பார்கள். இன்னும் சிலர் குடும்பப் பெருமை கொடிகட்டிப் பறக்க வேண்டும் என்று தாத்தா பெயரை வைப்பார்கள். அதற்குப் பிறகு அந்தப் பேரன் (தாத்தா பெயரன்) 'எங்கள் தாத்தாவுக்கு ஒரு பெயர் இருந்தது' .... என்று அவர் பெயரை வாழ வைத்துக் கொண்டிருப்பான். பேரனுக்கு மகன் கொள்ளுப் பேரனாம்; கொள்ளுப்பேரனின் மகன் எள்ளுப் பேரனாம். இந்தக் கொள்ளு, எள்ளு வியாபாரம் நடப்பதெல்லாம் தாத்தாவால் தானே!

ஒரு குடும்பத்தில் இரண்டு மூன்று ஆண்கள் இரண்டு மூன்று பெண்கள் இருந்தால் போதும்... அவர்கள் வயிற்றுப் பிள்ளைகளில் பாதிப்பேருக்கு மன்னார் சாமி அல்லது மாடசாமி என்று தாத்தா பெயர் அமைந்துவிடும். ஒவ்வொரு தாத்தாவும் காந்தியைப்போல் நேருவைப் போல் பெயர் விளங்கும் பெருமகனாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.... பெயர் வழங்கும் பெருமகனாக (Namelender) இருந்தால் போதும்.

●

எந்த ஊரும் நரிக்குறவர்களுக்குச் சொந்தமல்ல... ஆனாலும் அவர்கள்தான் பூமி புத்திரர்கள்-மண்ணின் மைந்தர்கள்! எந்த ஊரில் தங்கியிருக்கிறார்களோ அந்த ஊரின் பெயரை மறக்காமல் அங்கே பிறக்கும் பிள்ளைக்கு வைக்கிறார்கள். டில்லியில் பிறந்தால் அவன் பெயர் டில்லி......

அவனைப் பார்க்கும்போது ஆனந்தமாக ''என்ன டில்லி, குதுப்மினாரெல்லாம் நலந்தானா?'' என்று ஒரு வார்த்தை கேட்கலாம்.

அரும்பு, மொட்டு, மலர் என்று செடி, கொடிகளின் சீதனங்களைப் பருவத்துக்கு ஒரு பெயரிட்டு அழைப்பதைப் போல் செவ்விந்தியரில் சில பிரிவினருக்கு ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு பெயர் வைத்துக் கொள்ளும் பழக்கம் உண்டாம். பால்யத்தில் ஒரு பெயரும், வாலிபத்தில் ஒரு பெயரும், வயோதிகத்தில் ஒரு பெயரும் வைத்துக்கொள்வார்களாம்.

பாலகிருஷ்ணன் - கோபாலகிருஷ்ணன் - ராஜகோபால கிருஷ்ணன் - ரங்கராஜ கோபாலகிருஷ்ணன் - ஸ்ரீரங்கராஜ.... என்ற ஒரே ஆள் தான் வளர வளரப் பெயரையும் வளர்த்துக் கொண்டே போனால் என்ன? 'ஆளும் வளரணும் பெயரும் வளரணும் அதுதான்டா வளர்ச்சி' என்று பட்டுக்கோட்டை பாட்டைத் திருத்திப் பாடினால் என்ன?

சில குடும்பங்களில் பையனுக்கு மருமகன் பெயர் இருந்தால் மாமியார் கூப்பிடமாட்டார்; மாமனார் பெயர் இருந்தால் மருமகள் கூப்பிடமாட்டார் இதனாலெல்லாம் பையனுக்கு பலபெயர் ஏற்பட்டுவிடும். வீட்டில் இராமன், வெளியில் கிருஷ்ணன் என்பதைப் போல் வீட்டில் ஒரு பெயர் வெளியில் ஒரு பெயர் உடையவர்கள் அதிகம். ஹெப்சிபா ஜேசுதாசனின் நாவல் ஒன்றின் பெயர் '*மா-னீ*'. பர்மாவில் குடியேறிய தமிழ்க் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த பெண் ராணி ஞானஸ்நானம் செய்த பிறகு கிரேஸ் அழகுமணி ஆகிறாள். பள்ளியில் சேர்த்ததும் அழகுமணி என்ற பெயர் பர்மியக் குழந்தைகள் வாயில் நுழையாமல் மணியாகி பிறகு மா-னீ ஆகிறது; மா-மா, ஷ்வே-மா, மா-தாண்-ஷ்வே, மா-கிம்-மியா என்பன போன்ற பர்மியப் பெயராக மாறுகிறது என்று கதாநாயகியை அறிமுகப் படுத்துகிறார். அன்னம் வெளியிட்டுள்ள இந்த அற்புதமான நாவலின் பெயரைப் பார்த்து ஏதோ பர்மிய

நாவல் என்று வாசகர்கள் நெருங்கி வரத் தயங்குவதாகத் தெரிகிறது. 'ஜில்ஜில் ராணி' என்று பெயர் வைத்திருந்தால் இந்நேரம் ஓடோடி வந்திருப்பார்கள்.

இரண்டாம் உலகப் போர் தொடங்கிய போது பர்மாவைவிட்டுத் தாயகம் திரும்பிய குடும்பங்களுள் எங்கள் குடும்பமும் ஒன்று. சின்ன வயதில் என் அண்ணனோடு பர்மியப் பள்ளி ஒன்றில் நானும் சேர்ந்து படித்திருக்கிறேன். பள்ளியில் 'மௌ மௌ' என்று எனக்குப் பெயர் இருந்திருக்கிறது. பர்மாவைவிட்டு வெளியேறியபோது என் பாட்டிக்குப் பரமதிருப்தி. ''ராஜேந்திர பிரசாத்'' என்று மாமா வைத்த அழகான பெயரை பாவிப்பயல் பர்மாக்காரன் மாற்றப் பார்த்தானே.... நல்ல வேளை, என் பேரனைக் காப்பாற்றி விட்டேன்'' என்று பின்னாளில் என் பாட்டி சொல்லக் கேட்டிருக்கிறேன்.

என் பாட்டி மறைந்த பிறகு 'மௌ மௌ' என்ற அந்தப் பெயரின் மீது எனக்கு ஒரு பற்றுதல் ஏற்பட்டிருக்கிறது. அடடா, இவ்வளவு காலம் இந்தப் பெயரைப் புறக்கணித்துவிட்டோமே... கைவச முள்ள ஐந்தாறு புனை பெயர்களும் உள்நாட்டுப் பெயர்களாக உள்ளனவே.... இப்படி ஒரு வெளிநாட்டுப் பெயர் இருந்தும் விட்டு விட்டோமே என்று இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

என் அடுத்த கவிதைத் தொகுப்பை 'மௌ மௌ' என்ற பெயரில் வெளியிட்டால் என்ன என்றும் யோசிக்கிறேன். காலத்தை வென்று நிற்பவை மாவோ கவிதைகளா, மௌ மௌ கவிதைகளா என்று பட்டிமன்றப் பேச்சாளர்களுக்கு நான் ஒரு நல்ல தலைப்பைத் தந்த புண்ணியத்தைத் தேடிக் கொள்ளலாமல்லவா?

●

பெயரில் கவர்ச்சி வேண்டும் என்பதற்காகவோ என்னவோ பெண்களின் பெயர்களை வைத்துக்கொள்ளும் எழுத்தாளர்கள் இன்று பெருகி வருகிறார்கள். வாசகர்கள் தன்னைத் தெரியாமலிருக்கட்டும் என்று சுஜாதா போன்ற எழுத்தாளர்கள் புனைபெயர் சூடியிருக்கலாம். சுஜாதா வாசகர்களிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தால் இனிமேல் 'ரங்கராஜன்' என்ற புனை பெயரில்தான் அவர் எழுதவேண்டும்!

பெயரில் ஏதோ இருப்பதால்தானே பெண்கள் நடிக்க வந்ததும் புதுப்பெயர் புனைகின்றனர். துறவு பூண்டதும் பந்த பாசங்களைத் துறப்பதுபோல் நடிகைகள் தங்கள் பூர்வாசிரமப் பெயர்களைத் துறக்கின்றனர். நதிமூலம் ரிஷிமூலம் கேட்கக் கூடாது என்பது போல நடிகைகளின் பெயர் மூலம் பற்றிப் பேசக்கூடாது. ஏதோ ஒரு முத்துப் பேச்சி ரம்பை ஆகலாம்; மூக்காயி மேனகையாக மாறலாம்.

எனக்குத் தெரிந்த, தமிழ்ப் பற்றுள்ள குடும்பத்தில் பிறந்த ஒரு பெண் நடிக்க விரும்பினார். அந்தப் பெண்ணின் பெயர் தமிழ்ச்செல்வி. வீட்டில் தாய் 'செல்வி' என்றும் தந்தை 'தமிழ்' என்றும் செல்லமாகக் கூப்பிடுவார்கள். நடிக்கப் போனதும் இயக்குநர், 'தமிழ்ஸ்ரீ' என்று அந்தப் பெண்ணின் பெயரை மாற்றவேண்டும் என்றார்... ராஜ்ஸ்ரீ, கலாஸ்ரீ மாதிரி.... அப்போதுதான் பெயர் எடுப்பாக இருக்கும் என்றார்.... 'சீச்சீ நடித்தது போதும்' என்று பெண்ணைப் பெற்ற தந்தை ஒரே வார்த்தையில் சொல்லி விட்டார்!

●

ஊர்ப்பெயர்களைப் பற்றி ஆராய்வது மேல்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் ஒரு ஆராய்ச்சித் துறையாக

வளர்ந்துள்ளது. அது நம் பல்கலைக்கழகங்களுக்கும் தொற்றிவிட்டது. தமிழறிஞர் ரா.பி.சேதுப்பிள்ளை 'ஊரும் பேரும்' என்னும் நூலில் சிதைந்தும் திரிந்தும் போயுள்ள தமிழக ஊர்ப் பெயர் பலவற்றைப் பல ஆண்டுகளுக்கு முன்பே நுணுகி ஆராய்ந்துள்ளார்.

காவிரியாற்றின் பழமையான துறைகளுள் ஒன்று மயிலாடுதுறை. காவிரிச் சோலையில் தோகை விரித்தாடும் கோலமயில்களைக் கண்டு ஏதோ ஒரு காலத்தில் யாரோ ஒருவர் மயிலாடுதுறை என்று பெயர் வைத்திருக்க வேண்டும். ஆங்கிலேயர் நம் தேரைப் பார்த்துவிட்டு Car என்றார். அதன்பலன் இன்று வரைக்கும் நாம் தேரோடும் வீதிகளையெல்லாம் North Car Street, South Car Street என்கிறோம். இன்னும் நம்மிடம் ஒட்டிக் கொண்டுள்ள ஆங்கிலமோகம் போல் முன்பு வடமொழி மோகமும் இருந்தது. வடமொழிவாணர் ஒருவர் நாவில் மயில், மாயூரம் என்றும் மயிலாடுதுறை மாயூரபுரம் என்றும் மாறியிருக்கிறது. அது நாளடைவில் மாயவரம் என்று ஆகியிருக்கிறது என்று அறிஞர் சேதுப்பிள்ளை தெளிவு படுத்தியுள்ளார். அந்த ஆராய்ச்சியின் பயனால்தான் இப்போது மாயூரம் போய் பழைய மயிலாடுதுறை வந்திருக்கிறது.

டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக மாற்று என்று ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தினார் கலைஞர். அவர் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்தபோது பாரிஸ்கார்னரை 'பாரிமுனை' என்றும் கெல்லீஸை கிள்ளியூர் என்றும் மாற்றினார். சென்னையைத் தமிழ்நாடு என்று அழைக்க உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்டார் சங்கரலிங்க நாடார்....பெயரில் என்ன இருக்கிறது என்று பேசாமல் இருக்க முடிந்ததா இவர்களால்?

ஆட்சிக்கு வரும் யாரும் வேறு எந்தச் சீர்திருத்தம் செய்யாவிட்டாலும் 'பெயரளவிலாவது' ஏதாவது செய்ய வேண்டியிருக்கிறது. 28 ஊர்ப்பெயர்களை மாற்றினோம், 78 தெருப் பெயர்களை மாற்றியுள்ளோம். 118 சந்துப் பெயர்களை மாற்றியுள்ளோம் என்று இனிமேல் ஆட்சியில் உள்ள கட்சி தங்கள் சாதனைப் பட்டியலில் அதையும் ஓர் அம்சமாகச் சேர்த்தாலும் சேர்க்கலாம்.

●

ஒரு நகரத்தில் புதிதாய் உருவாகும் பெரியதும் சிறியதுமான இரண்டு தியேட்டர்களுக்குப் பொருத்தமான பெயர் எழுதி அனுப்புபவர்களுக்கு ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும் என்ற விளம்பரத்தைப் பார்த்து என் மாணவர் ஒருவர் ஏழைத் தருமியைப் போல் என் உதவியை நாடினார். ஊர்வசி மாதவி அல்லது மேனகை சகுந்தலை என்ற பெயர்களை எழுதிக் கொடுத்தேன். இலக்கியம் படித்தவர்களுக்குத் தெரியும் ஊர்வசியின் மரபில் வந்தவள் மாதவி, மேனகையின் மகள் சகுந்தலை என்று.

தியேட்டர் முதலாளி இந்த இலக்கிய வம்புக்கெல்லாம் போகாமல் ஏதோ சினி மினி என்று பெயர் வைத்து விட்டார். என் மாணவர் பரிசு கிடைக்கவில்லை என்று மிகவும் வருத்தப்பட்டுச் சொன்னார். அந்தச் சில நிமிடங்களிலாவது நான் சிவபெருமானாக இருந்திருந்தால் என் மாணவருக்காக நெற்றிக் கண்ணைத் திறந்திருக்க முடியும்.

என் நண்பர் ஒருவர் ஒரு நாள் என்னைத் தேடி ஓடோடி வந்தார். 'என்ன விஷயம்' என்று கேட்டேன். 'நீங்கள் பெரிய கவிஞர், வார்த்தை தமிழுக்கு வழங்கும் வள்ளல்.... என் காதலியின் பெயர் சரித்திர காலப் பெயராக

இருக்கிறது... அதை மாற்றப் போகிறேன். வேறு ஒரு நல்ல பெயர் சொல்லுங்கள்' என்றார்... நண்பரின் காதலியை ஆளாக்கிய பெற்றோர்க்கு என் ஆழ்ந்த அனுதாபங்களை மனதுக்குள் தெரிவித்துக் கொண்டு, உங்கள் காதலி எப்படி இருப்பாள் என்று கேட்டேன். 'தேவதை' மாதிரி இருப்பாள் என்று அவர் வாயில் தேனொழுகச் சொன்னார்... அப்படியானால் 'தேவதை' என்றே பெயர் வைத்துவிடுங்கள் என்றேன். நண்பர் பூரித்துப் போனார். சரித்திர காலத்திலிருந்த நண்பரின் காதலியைப் புராண காலத்துக்கு அனுப்பிய எனக்கு நானே ஒரு 'சபாஷ்' சொல்லிக் கொண்டேன். ஒரு மாதத்தில் ''நிகழும் ருத்ரோத்காரி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 25 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை உதயாதி நாழிகை 14க்கு மேல் 15 அளவில் காலை 11-36க்குமேல் 12 மணி அளவில் திரு. முத்துச்சாமியின் புதல்வன் நிறைநாட்செல்வன் திருப்பதிசாமிக்கும் திரு. தேவேந்திரன் புதல்வி நிறைநாட்செல்வி தேவதைக்கும்...' என்று திருமண அழைப்பிதழைப் படித்துப் பார்த்துப் பரவசமடைந்தேன்!

●

ஒரே மாதிரி ஓசையை உடைய சிலபெயர்கள் -கீதா, ராதா, சீதா - சில நேரங்களில் குழப்பத்தை ஏற்படுத்தும்; சில நேரங்களில் தர்மசங்கடமான நிலையை உண்டாக்கும்.

வெளியூரில் இருக்கும் என் நண்பர் ஒருவர்.... (இங்கிதம் கருதி அவரைக் கிருத்துவராக மாற்றியுள்ளேன்) அவர் வீட்டுக்கு மூன்று முறை போயிருக்கிறேன். முதல் முறை நண்பரின் மூன்று வயதுப் பெண் குழந்தையின் பெயரைக் கேட்டுக் கொஞ்சிக் கொண்டிருந்தேன். இரண்டாவதுமுறை நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்

போது என் நண்பர், தம் மனைவியைப் பெயர் சொல்லி அழைத்து 'காபி' கொண்டு வரச் சொன்னார். மூன்றாவது தடவை நான் போனபோது சும்மா இருக்காமல் அரைகுறை ஞாபகத்தில் நண்பரின் குழந்தையை 'இங்கே வாம்மா ரோஸி என்று அன்பாய் அழைத்தேன்... நாகரிகமாக என் நண்பர் சிரித்தபோது தான் லூசி என்று அழைப்பதற்குப் பதிலாக ரோஸி என்று அம்மா பெயரை அழைத்தது புரிந்தது. எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. ஏதோ ஒரு குற்ற உணர்வோடு நண்பரின் முகத்ததைக் கவனித்தேன். கொஞ்சமும் களங்கமில்லாமல் நண்பரின் முகம் 'எடுக்கவோ கோக்கவோ' என்று கர்ணனிடம்கேட்ட துரியோதனன் முகம் மாதிரி இருந்தது. என் வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் இது.

●

பல ஆண்டுகளுக்கு முன்பு விகடனில் வெளிவந்த பில ஹரியின் சிறுகதை.... கதையின் பெயர் 'ப்..பூ!' பணக்கார வீட்டுப் பையன் ஒருவனின் பிறந்த நாள்விழா. ஏழு வயதில் அடி எடுத்து வைக்கும் அவனை வாழ்த்துவதற்கும் வயிறு நிறையச் சாப்பிடுவதற்கும் உற்றார் உறவினர்கள் கூடியிருக்கிறார்கள். பையனோ வாசலில் பரட்டைத் தலையோடும் பசியோடும் நிற்கும் ஏழைப்பையன் ஒருவனைப் பார்க்கிறான். பிறந்த நாள் அலங்காரத்தைச் சுமந்தபடி அவனுக்குச் சாதம் சாம்பார் கறி எல்லாம் கொண்டு வருகிறான். எத்தனையோ இடங்களில் வசைமாரி பொழிந்து விரட்டி அடித்தாலும் விடாமல் 'ஐயாசாமி' என்று கெஞ்சும் அவனை, தன்னைவிட வயதில் சிறியவனான பணக்காரப் பொடியனிடம் பிச்சை வாங்கலாமா என்ற ஒரு தன்மானம் உறுத்துகிறது. அந்த

நேரம் பார்த்து பணக்காரப் பையனின் தந்தையார் தம் நண்பரிடத்தில் நெடுநாட்களாய்ப் பிள்ளையில்லாமல் பிறந்ததால் ஊரார் பிச்சையாய் வளரட்டும்என்று பிச்சை என்று பெயர் வைத்ததாகச் சொல்கிறார். அதைக் கேட்டதும் உணவு கொண்டு வந்த, பணக்காரச் சிறுவனைப் பார்த்து 'உன் பேரே பிச்சை; இன்னொருத்தனுக்கு நீ பிச்சை போடுகிறாயா... என் பேரு என்ன தெரியுமா, ராஜா! பிச்சைகிட்ட ராஜா போய் பிச்சை வாங்கலாமா' என்று அலட்சியமாக அறுசுவை உணவை உதறித் தள்ளிவிட்டு கம்பீர நடை போடுகிறான்.

•

சேக்ஸ்பியர் எழுதிய ஜூலியஸ் சீசர் நாடகத்தில் ஒரு சுவையான காட்சி... சீசரைக் கொன்ற சதிகாரர்களில் ஒருவன் சின்னா என்பவன்... அதே பெயருடைய மற்றொருவனைக்- கவிஞனைச் - சின்னா என்ற பெயர் வைத்த ஒரே காரணத்துக்காகக் கொன்று விடுகிறது ரோம் நாட்டுக் கும்பல். கும்பலில் சிக்கிக்கொண்ட சின்னா எவ்வளவோ கெஞ்சுகிறான். நான் சதிகாரன் சின்னா இல்லை கவிஞன் சின்னா என்கிறான். ''அப்படியானால் அவன் எழுதிய மோசமான பாடல்களுக்காக அவனைக் கொல்லுங்கள்'' என்கிறான் கும்பலில் ஒருவன். 'என்னை விட்டுவிடுங்கள் நான் சதிகாரன் சின்னா இல்லை, ' என்று மீண்டும் மன்றாடுகிறான்... ''அதைப் பற்றிக் கவலை யில்லை. அவன் பெயர் சின்னா! அவன் இதயத்திலிருந்து அவன் பெயரைப் பெயர்த்தெறியுங்கள். பின்னர் அவனைப் போகவிடுங்கள்'' என்கிறான் இன்னொருவன். கடைசியில் ஒரு வழியாய் போகவேண்டிய இடத்திற்கு அவனைப் போகவிடுகிறார்கள். பாவம் அவன் செய்த ஒரே


குற்றம், சின்னா என்ற பெயர் வைத்துக் கொண்டிருந்தது தான்....

●

இவ்வளவுக்குப் பிறகும் சேக்ஸ்பியர் 'பெயரில் என்ன இருக்கிறது' என்று வாயைத் திறக்க முடியுமா? மூச்.......

❖

28-12-83



# கிழமைகளில் அவள் ஞாயிறு

''அன்று ஞாயிற்றுக்கிழமை...... கமலா ஆவி பறக்கும் காபியுடன் என்னை எழுப்பினாள்'' என்று தொடங்கும் மத்தியதர வர்க்கத்துக் கணவன்-மனைவி கதைகள் நம்வார இதழ்களில் வாடிக்கையாக வெளிவந்த காலத்தை ஒருமுறை ஜெயகாந்தன் சிறுகதை வளர்ச்சி பற்றிப் பேசும்போது குறிப்பிட்டார்.

கதைகளில் - இலக்கியங்களில் இடம் பெறும் 'அந்தஸ்து' ஞாயிற்றுக் கிழமைக்குக் கிடைக்கிறதென்றால் அதற்குக் காரணம், பிறந்த வீட்டுச் சீதனங்களோடு வரும் மருமகள் போல் அது விடுமுறையோடு வருவதுதான்.

●

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பது வெள்ளையர் ஆட்சி நமக்கு விட்டுப் போயுள்ள மிச்ச மீதிகளுள் ஒன்று.

விடுமுறை என்பது ஒரு காலத்தில் மதசம்பந்தமான விழாக்களுக்கே அளிக்கப்பட்டது. புனித நாள் - Holyday - என்று அதற்குப் பெயர் ஏற்பட்டுப் பின்னால் அது விடுமுறை நாள் - Holyday - என்று மாறியதாகச் சொல்லப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை கிறித்துவர்களின் வழிபாட்டு நாள். வழிபாட்டு வசதிக்காக ஆங்கிலேயர்கள் தங்கள் ஆதிக்கக் கொடி பறந்த நாடுகளில்அதனை விடுமுறை நாளாக்கி னார்கள். இதே மாதிரி இஸ்லாமிய நாடுகளில் வெள்ளிக்கிழமை விடுமுறை நாளானது. இந்துக்களுக்கு எல்லாக் கிழமைகளும் ஏதாவது ஒரு விதத்தில் புனிதமாக இருக்குமே.... என்றைக்கு விடுமுறை விடுவது என்பதில் நம் ஜோஸ்யர்களுக்கும் பூஜ்யர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டுவிடக்கூடாதே என்ற நல்ல எண்ணத்தில்தான் இன்றுவரை நம் அரசு கர்ஸான் காட்டிய வழியில் ஞாயிற்றுக் கிழமையையே விடுமுறையாகப் பின்பற்றுகிறது.

நேற்று எனக்கு வந்த சோவியத்யூனியன் காலண்டரைப் பார்த்தேன். அதில் ஒவ்வொரு வாரமும் திங்கட் கிழமைகளில் தொடங்குவதைக் கவனித்து வியந்தேன். விடுதலை பெற்ற பிறகு நாமும் நம் காலண்டரிலாவது வேலைக்குப் புறப்படும் முதல் நாளிலிருந்து- திங்கட்கிழமையிலிருந்து, ஒவ்வொரு வாரத்தையும் தொடங்கவைத்திருக்கலாம். நமக்கோ விடுதலை உணர்ச்சிக்குச் சமமாய் இந்த விடுமுறை உணர்ச்சியும் இருக்கிறதோ! விடுமுறையை அனுபவிப்பதைப்போல் கொஞ்சம்கூட அலுப்பில்லாமல், ஆனந்தமாய் வேலைபார்க்க வேண்டும் என்றுதான் நம் அரசாங்கம் காலண்டரில் கை வைக்கவில்லையோ என்னவோ!

நர்சரியில் படிக்கும் என் மகளும் கல்லூரியில் வேலை பார்க்கும் நானும் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்தோம். 'அப்பா இந்த வாரம் எங்களுக்கு 'இரண்டு ஞாயிற்றுக் கிழமை' என்று விடுகதை போட்டாள் என் மகள். ''வியாழக்கிழமை விநாயகர் சதுர்த்தி... அதையும் சேர்த்துச் சொல்கிறாயா?'' என்றேன். ஆமாம்... உங்களுக்கு....''I don't know, my daughter" என்று பிளிட்ஸ் அப்பா மாதிரி பதில் சென்னேன்.

விநாயகர் சதுர்த்தி மட்டுமல்ல, வேறு யார் யார் சதுர்த்திகளையோ காட்டி விடுமுறை பெறும் ஆற்றல் கல்லூரி மாணவர்களுக்குக் கைவந்த கலை. மணலைக் கயிறாய் திரிக்க முடியாமற் போகலாம், வானத்தை வில்லாய் வளைக்க முடியாமற் போகலாம். ஆனால் நம் மாணவர்கள் நினைத்தால் ஏழு நாட்களையுமே ஞாயிற்றுக் கிழமை ஆக்கமுடியும்.

ஒருமுறை 'படிப்பு நிறுத்தம்' செய்து கல்லூரி வாசலில் திரண்டிருந்த மாணவர் கூட்டத்திடையே ஒரு மாணவர் ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்தார். ''இன்று புனித நாள்.... புண்ணியம் தேடும் நாள்... இராமேஸ்வரம் போகவேண்டும். தீர்த்தம் ஆடவேண்டும். தெரிந்தும் விடுமுறை தர மறுக்கிறார் இந்த முதல்வர். மாணவர்களே! போனால் போகிறது என்று விட்டுவிட இன்று சாதாரண அமாவாசையா? தை அமாவாசை...! நாம் ஒன்று படுவோம்... அமாவாசைக்கு விடுமுறை விடும்வரை போராடுவோம்'' என்று முழங்கினார்.

பக்கத்தில் இருந்த என்னிடம் 'அந்தப் பையன் யார் ஸார்' என்று கேட்டார் முதல்வர். முதலாண்டு மாணவர்... பெயர் அப்துல்காதர் என்றேன். முதல்வருக்கு ஆச்சரியம்... 'அப்துல்காதருக்கும் அமாவாசைக்கும் என்ன சம்பந்தம்?'

என்று கேட்டார். 'விடுமுறைதான்' சம்பந்தம் என்றேன். இந்து முஸ்லீம் சகோதரத்துவத்துக்கு விடுமுறைகூடத் தன் பங்குக்கு உதவமுடியும் என்ற உண்மை அப்போதுதான் அவ்வளவு படித்த எங்கள் முதல்வருக்குப் புரிந்தது.

●

வாரம் ஒருமுறை வருவதுதான் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்று அலட்சியமாகச் சொல்லிவிடமுடியாது.

வேறொரு ஊரில் வேலைபார்த்துச் சனிக்கிழமை காரையோ, ரயிலையோ பிடித்து ஊர் போய்ச் சேரத் துடித்து நிற்பவர்களின் முகத்தைப் பாருங்கள்; புரியும் அதன் மகத்துவம். அந்த முகங்களின் மறுபக்கம் ஞாயிற்றுக் கிழமை எப்போது வரும், அவர் எப்போது வருவார் என்று எதிர்பார்க்கும் ஒரு மனைவியின் எதிர்பார்ப்பும் ஒரு மழலையின் ஏக்கமும் பிரகாசமாய்த் தெரியும்.

அதுவும் புதிதாய்த் திருமணமானவர் என்றால் கேட்க வேண்டியதில்லை. சனிக்கிழமை காலையிலிருந்தே அவர் பரபரப்பாக இருப்பார்; அலுவலகத்தில் இருப்புக் கொள்ளாமல் அங்குமிங்கும் போவார்.. மாலை மணி ஐந்தாவதற்கு முன்பே ஃபைல்களைக் கட்டி வைத்துவிட்டு சக ஊழியர்களிடம் ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு பேருந்து நிலையத்தை நோக்கி வேகமாக நடப்பார்.

''மாதங்களில் அவள் மார்கழி!
மலர்களிலே அவள் மல்லிகை''

என்பதை

''மாதங்களில் அவள் மார்கழி
கிழமைகளில் அவள் ஞாயிறு''

என்று குதூகலமாகத் தனக்குள் பாடிக்கொண்டே நடப்பார்! 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்ற இளங்கோவடிகளின் ஒரே ஒரு வரியை மந்திரம்போல் உச்சரித்துக் கொண்டே நடப்பார்!

●

குச்சு வீடும் 'ஜப்தி' செய்யப்பட்டால் ஏழைக் குடியானவன் எப்படிப் பரிதவிப்பானோ அப்படி ஞாயிற்றுக் கிழமையைப் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கும் அரசாங்க ஊழியர்களைப் பார்த்தால் பாவமாயிருக்கும்.

சில அதிகாரிகள் தங்கள் ஊழியர்கள் ஞாயிற்றுக் கிழமைகளிலும் அலுவலகம் வரவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

''ஏன் ஸார்! ஸ்டேட்மெண்ட் போகவில்லையே... நாளை வருவீர்களா?'' என்று சற்றே அதிகார தொனியை அடக்கிக் கேட்பார்கள்.

''நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை ஸார்...'' என்று பதில் வந்தால் ''ஆமா...ஆமா... ஒரு வேளை வருவீர்களோ என்று பார்த்தேன்'' என்று தம் எதிர்பார்ப்பை நயமாய் வெளிப்படுத்துவார்கள்.

ஒரு ஆறு மாதம் அரசாங்க அலுவலகத்தில் நான்வேலை பார்த்திருக்கிறேன். நான் வேலை பார்த்த அலுவலகத்தில் அப்போது ஆண்டுச்சோதனை. மாவட்ட அதிகாரி குறிப்பிட்டபடி வெள்ளிக்கிழமை வரமுடியவில்லை. சனிக்கிழமை மாலை வந்து அடுத்த நாளும் இருந்து சோதனை (!) செய்தார். சோதனை முடிந்ததும் மாவட்ட அதிகாரி மனமிரங்கி ''யாருக்கேனும் ஏதேனும் குறை இருந்தால் கூறலாம் என்றார். வழக்கமாக ஊழியர்கள்

சொந்த ஊருக்கு மாறுதல் கோருவது உண்டு. 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று அவரும் பதில் கூறுவதுண்டு. அந்த முறை, என்னைப் போல் புதிதாய் 'சர்வீஸ் கமிஷன்' அருளால் வேலைக்கு வந்து சேர்ந்த ஓர் இளம் ஊழியர், ''ஒரு கோரிக்கை ஐயா! இனிமேல் ஞாயிற்றுக் கிழமைகளில் இன்ஸ்பெக்ஷன் வராதீர்கள்'' என்று துணிச்சலாய்ச் சொன்னார். அதிகாரி அசந்து போனார்.

•

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை மகாத்மியத்தை அழகாய்ச் சித்திரிக்கிறார் சார்லஸ் லாம்ப். உறுமீன் வரும்வரை வாடியிருக்கும் கொக்கைப்போல் ஞாயிற்றுக்கிழமையை அனுபவிக்க ஆறு நாட்களாய்க் காத்திருக்கிறார் ஒரு வங்கி அலுவலர். ஆனால் திங்கட்கிழமை அனுப்ப வேண்டிய 'ரிட்டன்', செவ்வாய்க் கிழமை செல்ல வேண்டிய ஆண்டறிக்கை, புதன்கிழமை போகவேண்டிய 'பாலன்ஸ் ஷீட்', வியாழக்கிழமை திரட்டவேண்டிய புள்ளி விவரங்கள், வெள்ளிக்கிழமை கெடுவாகிற பதிலறிக்கை, சனிக்கிழமை முடிக்க வேண்டிய நீண்ட நாளைய ஃபைல்கள் இப்படிச் சிந்தித்தே அந்த ஞாயிற்றுக்கிழமையின் புத்தம் புதுக் காலையும் பொன்மாலைப் பொழுதும் கவலையிலேயே கழிந்து விடுகின்றன. சுகமாக அனுபவிக்க வேண்டிய நேரம் சோகமாகிவிடுவதால் அந்த ஞாயிற்றுக் கிழமையைக் கருப்பு ஞாயிறு (Black Sunday) என்கிறார் சார்லஸ்லாம்.

•

எழுத்தைப் பகுதி நேரத் தொழிலாகக் கொண்டிருக்கும் என்னைப் போன்றவர்கள் ஞாயிற்றுக்கிழமையை

ஏக்கத்துடன் எதிர்பார்ப்பதுண்டு. வாராவாரம் ஞாயிற்றுக் கிழமை வரும்; விடியும்.

இன்று விடுமுறைதானே என்று கொஞ்சம் தாமதமாகவே எழுந்திருப்பதுண்டு. வாரத்தின் மற்ற நாட்களில் இல்லாத அளவு சுவையாகச் சமைக்கச் சொல்ல வேண்டுமென்று கடையில் கறி காய் வாங்கி மனைவியிடம் கொடுத்துவிட்டு, குளியல் சிற்றுண்டி முடித்து அமரவே மணி 12 ஆகிவிடும். அதன் பிறகு ஒரு மணி நேரம் வாரமலர்களைப் புரட்டுவதில் கழியும். இப்படி அரைநாள் ஓடிவிடும். போகட்டும் என்று மதியத்துக்கு மேல் எழுதலாம் என்று உட்கார்ந்தால் வானொலி அலறும். விடுமுறை விருப்ப நிகழ்ச்சியை ஒலிபரப்பும். வீட்டில் அவ்வளவு பேருக்கும் அதி விருப்பம். அதை எப்படித் தன்னந்தனியாக நான் எதிர்க்க முடியும்?

பரவாயில்லை; இன்னொரு ஞாயிறு வரட்டும் பார்த்துக் கொள்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறதா? இன்னொரு நாள், 'இந்த ஞாயிற்றுக்கிழமை எங்கேயும் போகக்கூடாது, 'தூது'க்கு ஒரு நெடுங்கவிதை எழுதிவிடவேண்டும் என்று காகிதமும் பேனாவுமாய் அமர்ந்தால் வாசல் மணியோசை கேட்கும்... தொடர்ந்து மாடிப்படிகளில் யாரோ நடந்து வரும் காலடி ஓசை கேட்கும்... மலையேறிப் போனாலும் விடாத மைத்துனர் மாடியேறி வந்துவிடுவார். அவர் பின்னால் வரும் தீராத விளையாட்டுப் பிள்ளைகளில் ஒன்று என் மடியேறி அமர்ந்து கொண்டு பேனாவை வாங்கிக் காகிதத்தில் கோழிமுட்டை போட ஆரம்பிக்கும். அவ்வளவுதான்... இந்த ஞாயிறும் இன்னொரு ஞாயிறே என்று நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

●


ஞாயிற்றுக்கிழமையைக் கேலிக்குரியதாக்க முயலும் சிலரை நம்மால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சங்கீத வித்வான் களில் சிலர் தேங்காய் மூடிக் கச்சேரி செய்கிறார்கள், வாய்ப் பில்லாமல். அதற்காக அவர்களை 'ஞாயிற்றுக்கிழமை சங்கீத வித்வான்கள்' என்று சொல்வதில்லை.

ஆனால் தொழில் சரியில்லாத வழக்குரைஞரை மட்டும் ஞாயிற்றுக்கிழமை வக்கீல் (Sunday Lawyers) என்று கேலி பேசுகிறார்கள். ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றம் இல்லை என்பதால் தானே இந்த அபவாதம்?

இந்தப் பழிமொழியை மாற்றுவதற்காகவாவது ஞாயிற்றுக் கிழமை நீதிமன்றங்களை இயங்கச் செய்ய வேண்டும் ... இதற்காக வழக்குரைஞர்கள் 'உயிருள்ள வரை' போராட வேண்டும்.

❖

4-1-84



# திருவிழா வருகிறது...
# தேர் வருகிறது ...

கோயிற் சுவர்களில் வெள்ளை அடித்துப் பட்டை தீட்டப்பட்டு விட்டது. காப்புக் கட்டியாகி விட்டது. சப்பரம் பழுது பார்க்கப்பட்டு விட்டது. திருவிழா நடக்கப்போகிறது... தேர் வரப் போகிறது...

ஆண்டு முழுவதும் ஆண்டவனை நோக்கி மக்கள் ஆலயத்திற்குச் சென்றது போக அந்த ஒருநாள் மட்டும் ஆண்டவன் தேரில் ஏறி மக்களிடம் வருவான்.

இந்தப் புத்தாண்டில் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிற தேர்தல் திருவிழாவும் ஏறக்குறைய தேர்த் திருவிழா மாதிரிதான்.

மற்ற நாட்களில் ஒரு சட்டமன்ற உறுப்பினரையோ நாடாளுமன்ற உறுப்பினரையோ மக்கள் நடையாய்

நடந்தும் கிடையாய்க் கிடந்தும் தரிசிக்க வேண்டும். தேர்தல் வந்துவிட்டால் போதும்... கோட்டையில் கோயில் கொண்டுள்ள நம் அரசியல்வாதிகள் எல்லாம் ஜீப்பிலும் வானிலும் மக்களைத் தேடித் தெருத்தெருவாய், வாசல் வாசலாய் கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டே வருவது 'திவ்யமாய்' இருக்கும்!

ஆண்டு முழுவதும் எதையாவது சுமந்தும் தூக்கியும் குனிந்தும் பாடுபடும் ஏழை மக்கள் வண்ண உடை உடுத்தி மகிழ்ச்சியாய்க் கையை வீசிச் செல்லும் ஒரே ஒரு நாள் கிராமத்துத் திருவிழாதான் என்று டாக்டர் மு.வ. வர்ணிப்பார். அதேபோல், தேர்தல் திருநாளில் மட்டும்தான் இந்நாட்டு மன்னர்களுக்கு ஏகப்பட்ட செல்வாக்கு.

தீபாவளிக்குத் தீபாவளி மருமகனுக்குக் கிடைக்கும் எண்ணெய்க் குளிப்புப் போல் ஏகப்பட்ட மரியாதை!

திருவிழாவில் செல்லாத காசைச் செல்லவைக்கும் சிறுவர்களின் சாமர்த்தியம் நம் நாட்டுச் செல்வர்களுக்கும் கைவந்த கலை.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த - கருப்புப் பணத்தை ஒழிக்க - அரசாங்கம் நூறுரூபாய் நோட்டு செல்லாது என்று அறிவிக்கலாம் என்று சிலர் யோசனை சொல்வதுண்டு. என் யோசனை, அதற்குப் பதிலாக தேர்தல் என்று அறிவித்தால் போதும். பதுக்கி வைக்கப்பட்ட கருப்புப் பணம் காவிரி வெள்ளமாய்ப் பாயும்... பலருக்கும் போய்ச் சேரும்.

நம் தலைவர்கள் ஜனநாயக சோசலிசம் ஜனநாயக சோசலிசம் என்று ஓயாமல் முழங்கியதன் அர்த்தம் இப்போதுதானே புரிகிறது.

ஜனநாயகத்தின் விசுவரூபம் தேர்தல்... அந்தத் தேர்தலில் பணக்காரர்களைப் போட்டியிடச் செய்து அவர்களிடம் குவிந்திருக்கும் செல்வத்தைப் பரவலாக்கிச் சட்டென்று சோசலி சத்தைக் கொண்டு வரலாம் என்பது அவர்கள் எண்ணம்... ஐந்தாண்டுக்கு ஒருமுறை வரும் தேர்தலை திருவிழாப்போல் ஆண்டுதோறும் வரவைத்தால், நம் தலைவர்களின் நல்ல எண்ணம் அதிவிரைவில் ஈடேறும்.

1957 தேர்தல் என்று நினைக்கிறேன்... எங்கள் பக்கத்தில் ஒரு தொழில் அதிபர் நாடாளு மன்றத்திற்குப் போட்டி யிட்டார். அவர் மைந்தர் இருவர் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டனர். கரன்சி நோட்டுகள் சினிமா நோட்டீஸ் மாதிரி பறந்தன. பம்பரமாய்ச் சுழன்று தேர்தல் பணியாற்றிய அவர்களுடைய ஏஜண்டின் காதில் படும்படி காற்று வாக்கில் ''அங்கே கேணிக்கரையில் இரண்டாயிரம், செட்டிய தெருவில் ஆயிரம்'' என்று இரண்டு பேர் பேசினால் போதும். ''காரில் ஏறுங்க சார், தாஜ்மகால் ஹோட்டலுக்குப் போய் டிபன் சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்'' என்று காரை நிறுத்திக் கூப்பிடுவார். அவர்களோ, ''எங்களைக் குதிரைப்பெட்டி ராஜமார்த்தாண்டன் சேர்வை வரச் சொல்லியிருந்தார். என்ன செய்வது? நீங்கள் விடமாட்டேன் என்கிறீர்கள்?'' என்று பெரிதாய்ப் பிரியக்கடை பண்ணிக் கொண்டே வண்டியில் ஏறுவார்கள்.

இப்படி இரைப்பையையும் பையையும் நிறைத்துக் கொள்பவர்கள் தேர்தல் கலையில் விற்பன்னர்களாக வேஷம் போடுவார்கள்; எவ்வளவோ செலவு செய்தும் வேறு சில காரணங்களால் அந்தத் தொழில் அதிபரும் அவரது பிள்ளைகள் இருவரும் தோற்றுப் போனார்கள்... மக்கள் வேடிக்கையாக, அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்

தோற்றதாகப் பேசிக் கொண்டார்கள். அதற்குப் பிறகு அவர்களும் தேவாரம், திருவாசகம் என்று பேசிச் சமயத்துறைக்குப் போய்விட்டார்கள்.

ஆண்டுதோறும் தேர்தல் என்றால் அரசு ஊழியர்கள் 'அகம் மலர முகம் மலர' வரவேற்பார்கள். அதுவும் வருவாய்த்துறை ஊழியர் களைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. அவர்கள்தானே தேர்தல் யந்திரத்தை இயக்குபவர்கள்! ஒரு தேர்தல் ஓய்ந்துவிட்டால், அது சம்பந்தப்பட்ட ஊழியர்கள் வரிசையாகப் பதவியிறக்கம் பெற நேரும்; அதற்கு முன் அடுத்த தேர்தல் வந்து விட்டால் பதவியைத் தக்க வைத்துக் கொள்ளலா மல்லவா?

அண்மையில் காந்திகிராமப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் அறம் 'பஞ்சாயத்துத் தேர்தல்களை தேர்தல் கமிஷனே ஏற்று நடத்தவேண்டும்' என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

எந்தத் தேர்தல் என்றாலும் உண்மையில் நடத்துவது என்னவோ உள்ளூர் தாசில்தாரோ பி.டீ.ஓ வோ தான். டில்லியிலிருந்து ஒவ்வோர் ஊருக்கும் தேர்தல் ஆணையாளரா வரப்போகிறார்? வெறும் அறிவிப்பு மட்டும்தானே அவரிடமிருந்து வரும்.

பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த உத்தரவிடுகிற அதிகாரம் மாநில அரசிடம் இருப்பதால், அது நடத்தவே மாட்டேன் என்கிறதே என்ற ஆதங்கத்தில் தான் டாக்டர் அறம் அப்படிக் கூறினாரோ என்னவோ? மாநில சுயாட்சி கேட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடலாமா?

பஞ்சாயத்துத் தேர்தல் மட்டுமா, கூட்டுறவுத் தேர்தல் உட்பட எல்லாத் தேர்தல்களையும் நடத்திவிட வேண்டு

மென்றுதான் முயல்கிறது, நம் மாநில அரசு! இல்லாவிட்டால் 1978 லிருந்து அடிக்கடி ஓர் ஊராட்சி ஒன்றியத்துக்குப் பத்தாயிரம் பன்னிரண்டாயிரம் என்று ஒவ்வோர் அச்சகத்துக்கும் வேலை கொடுத்து (சிறு தொழில் வளர்ச்சிக்கும் உதவி) வாக்காளர் பட்டியல் அச்சிட வேண்டுமென்ற அவசியமில்லை. 'எதிர் பாருங்கள்..... அதி விரைவில் பஞ்சாயத்துத் தேர்தல் வரப் போகிறது' என்று அவ்வப்போது விளம்பரம் செய்ய ஓர் அமைச்சர் இருக்கவேண்டிய அவசியமில்லை.

டாக்டர் அறம் மிகவும் அவசரப்படுகிறார்..... அது அதற்கு நேரம் காலம் வரவேண்டாமா? எல்லாம் விதிப்படிதானே நடக்கும்?

சில தினங்களுக்கு முன்பு இராசேந்திரசோழன் விழாவில் அமைச்சர் ஒருவர் ''இராசேந்திரச் சோழன் மட்டும் இப்போது இருந்தால் ஈழத்தில் தமிழ்ப் பெண்கள் படும் அவதியைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான்'' என்று பேசியதைப் பத்திரிகையில் படித்துவிட்டு அரசியல்வாதியான என் நண்பர் ஒருவர் ''இராசேந்திர சோழனின் முன்னோர்களும் சரி, அவனும் சரி பஞ்சாயத்துத் தேர்தல்களை ஒழுங்காக நடத்தியிருக் கிறார்கள் என்பதற்குக் கல்வெட்டுக்களில் ஆதாரங்கள் உள்ளன; அவன் வந்தால் இப்படிப் பஞ்சாயத்துத் தேர்தல்களை ஒத்திவைத்துக் கொண்டு போவதைப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டான்'' என்று கேலி செய்தார். ''இராசேந்திர சோழன் விழாவில் ஏதோ இரண்டு வார்த்தை புகழ்ந்து பேச வேண்டுமே என்று அமைச்சர் பேசியிருக்கிறார். அதற்காக அவன் நேருக்கு நேர் அமைச்சரைப் பார்த்து ஏன் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தவில்லை என்று கேட்கமுடியுமா? கேட்டால் ''நீ சட்டமன்றம், நாடாளுமன்றத் தேர்தலை நடத்திய

லட்சணம் தெரியாதா?'' என்று நம் அமைச்சர் திருப்பினால் என்ன செய்வான் அந்தச் சோழராசன்'' என்றேன் நான். நண்பர் வேகமாய் நடையைக் கட்டினார்.

''லட்ச ரூபாய் செலவு செய்தவன் தோற்கிறான். லட்சத்தோரு ரூபாய்செலவு செய்தவன் ஜெயிக்கிறான். இதுதான் தேர்தல், வெங்காயம்'' என்று பெரியார் சொன்னார்.

அண்மையில் மதுரையில் நடைபெற்ற அவருடைய கழக மாநாட்டில், கல்லூரி வளாகத்தில் அமைதி நிலவ வேண்டும் என்பதற்காகக் கல்லூரி மாணவர் பேரவைத் தேர்தலை ஒரு ஐந்து ஆண்டுகளுக்குத் தள்ளிப் போடலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ''கட்டைப் பிரம்மச்சாரிக்கு மற்றவர்களின் கல்யாண வாழ்க்கை பற்றிக் கருத்துச்சொல்ல என்ன தகுதி இருக்கிறது? தேர்தலையே தீண்டாத தி.க.வுக்கு தேர்தலைப் பற்றிப் பேச என்ன யோக்கிதை இருக்கிறது?'' என்று மாணவர்கள் சீறக்கூடும்.

எனினும் சாதி, மத வட்டார வெறிகளும் கட்சிபலமும் பணபலமும் கல்லூரி வளாகத்தை யானை புகுந்த வயலாக்கிக் கொண்டிருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ஒன்று செய்யலாம்... ஐந்து ஆண்டுகளுக்குத் தேர்தல் இல்லை என்று சொல்லாமல், பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தும் நிர்வாகத்திடம் - உள்ளாட்சித் துறையிடம் மாணவர் பேரவைத் தேர்தலையும் ஒப்படைத்துவிடலாம். சேர்த்தல் நீக்கல் என்று வாக்காளர் பட்டியல் அச்சிடுவது, எந்தெந்த வகுப்பை எந்தெந்த வேட்பாளருக்கு ஒதுக்குவது என்று தீர்மானிப்பது என்று தேர்தல் பணிகள் நடப்பதாக அவர்கள் நாட்களைக் கடத்தி விடுவார்கள். ஐந்து

ஆண்டுகள் என்ன, பத்து ஆண்டுகளுக்குத் தேர்தலில் நிற்கும் பாக்கியம் நம் மாணவர்களுக்குக் கிடைக்காது!

''ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை
எங்கள்
அடிமைச் சாசனத்தைப்
புதுப்பித்துக் கொள்ள
நாங்கள்
வரிசையாய் நிற்பது
வாக்குச் சாவடியில் தான்''

என்று எல்.கே. போஸ் என்னும் இளைஞர் 'கனல் கக்கக்' கவிதை எழுதியிருக்கிறார்.

எனக்கென்னவோ, இவர் இவ்வளவு கோபப்படுவது நியாயமாகத் தெரியவில்லை.

தேர்தல் திருவிழாவில் வாக்காளர்தான் தெய்வம்... தெய்வம் தெளிவாய் இருந்தால் ஜனநாயகம் இவ்வளவு மலிவாய்ப் போயிருக்காதே!

ஒரு லாட்டரிச் சீட்டு வாங்கும்போது இந்தத் தெய்வம் எவ்வளவு கவனம் செலுத்துகிறது... எந்த மாநிலம் வருமான வரியைக் கழிக்காமல் கொடுக்கும், கூட்டிப் பார்த்தால் எந்த எண் ராசியாய் இருக்கும், எந்தச் சீட்டுக்குச் சீக்கிரம் குலுக்கல் நடக்கும் என்று சிந்தித்துப் பார்த்துத் தேர்ந்தெடுக்கிறது.

'கனவின் விலை ஒரு ரூபாய்' என்று மாவேந்தன் ஒரு கவிதையில் சொன்னது மாதிரி ஒரு லாட்டரிச் சீட்டைக் கையில் வைத்துக் கொண்டு எவ்வளவு கனவு காண்கிறது, இந்தத் தெய்வம். கட்டடக் கனவு, கல்யாணக்கனவு, பயணக்கனவு, பதவிக் கனவு - இப்படி ஒரு ரூபாய்க்கு ஓராயிரம் கனவு காணத் தெரிந்த இந்தத் தெய்வத்துக்கு ஏன் ஓர் 'இந்தியக் கனவு' காண மட்டும் தெரியவில்லையாம்?

க்காரணம் வாக்குச் சீட்டு இலவசமாக வழங்கப்படுவது தான்... லாட்டரிச் சீட்டுப்போல விலை கொடுத்து வாங்கினால்தான் வாக்குச் சீட்டின் மதிப்புத் தெரியும்.

என்னைக் கேட்டால் வாக்குச் சீட்டையே கூட பரிசுச் சீட்டாக்கலாம் என்று ஒரு யோசனை சொல்வேன். வாக்காளர் ஒவ்வொருவரும் 5 ரூபாய் கொடுத்து வாக்களிக்க வேண்டியது. குலுக்கலில் ஏதாவது ஒரு எண்ணுக்குப் பரிசளிப்பது என்று அறிவித்தால் வாக்குப் பதிவும் நூறு சதம் நடக்கும்.

இளங்கவிஞர் எல்.கே.போஸ் அவர்களுக்கு இன்னொரு வார்த்தை... வாக்குச் சாவடியில் வரிசையில் நிற்பதை ஏன் அடிமைச் சாசனத்தைப் புதுப்பித்துக் கொள்ள நிற்பதாய் நினைக்க வேண்டும்...? அரிசிக்கு வரிசை, அடுப்பெரிக்கும் மண்ணெண்ணெய்க்கு வரிசை, பாம் ஆயிலுக்கு வரிசை, பாலுக்கு வரிசை, சீனிக்கு வரிசை, சினிமாவுக்கு வரிசை என்று எப்போதும் வரிசையில் நிற்கும் உரிமைச் சாசனத்தை வாங்குவதற்காக வாக்குச் சாவடியில் நிற்பதாக ஏன் நினைக்கக் கூடாது?

மற்ற ஊர்களில் எப்படியோ! எங்கள் ஊரில் இப்போதே தேர்தல் களை கட்டிவிட்டது. அதற்குக் காரணம், பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியில் நிற்பார் என்ற பத்திரிகைகளின் ஊகம்தான்.

அவர் நிற்பதாக மட்டும் நிச்சயமான அறிவிப்பு வரட்டும். அதற்குப்பிறகு பாருங்கள் எங்கள் ஊரை...!

குடியானவர்களின் கன்னங்கள் போல் குண்டுங்குழியுமாய்க் கிடக்கும் தெருக்கள், நாலிலே ஒன்றிரண்டு மட்டும் எரியும் தெரு விளக்குகள், எந்த வினாடியிலும் விழக் காத்திருக்கும் இடிபட்ட பள்ளிச்

சுவர்கள், மூட்டைப் பூச்சியை நசுக்கியதைப்போல் நாறும் தெப்பக்குளம் - எல்லாவற்றிற்கும் ஏக காலத்தில் விமோசனம் கிடைக்கும்.

நீண்ட நாட்களாக எதிர்பார்க்கும் கிராஃபைட் தொழிற்சாலை, சர்க்கரை ஆலை, மருதுபாண்டியர் பாலிடெக்னிக் - எல்லாவற் றிற்கும் கால்கோள் விழா நடக்கும். ஏன் எவ்வளவோ காலமாகத் தள்ளிப் போடப்பட்ட தலைநகர்ப் பிரச்சனைக்கு ஒரு முடிவு ஏற்பட்டு இராமநாதபுர மாவட்டத்தின் தலைநகர் சிவகங்கை என்று அரசு அறிவிக்கக் கூடும்.

ஏ, அதிர்ஷ்ட தேவதையே! பாரதப் பிரதமரைத் தென்னாட்டில் நிற்க வைக்கும் உன் கருணையே கருணை.

முதலில் கர்நாடகத்துச் சின்னமகளூரில் (சிக்மகளூர்) நிற்க வைத்தாய்... இந்த முறை சேதுபதியின் செல்லமகள் ஊரில் நிற்க வைக்க வா எங்கள் பக்கம்!

அதிர்ஷ்ட தேவதையே... பெரிய மனம் வைத்து வா, இந்தப் பக்கம்!

❖

*11-1-84*